தமிழ்நாடு அரசு கீழ்த்திசைச் சுவடிகள் வரிசை எண். 71

# கருப்பர் குளுவ நாடகம்

C

தமிழ்நாடு அரசு

1992

தமிழ்நாடு அரசு கீழ்த்திசைச் சுவடிகள் வரிசை எண்: 71

# கருப்பர் குளுவ நாடகம்

பதிப்பாசிரியர்:
டாக்டர் எஸ். சௌந்தரபாண்டியன்,
எம். ஏ.(தமிழ்), எம்.ஏ.(ஆங்), பி. எட்., டிப். வ.மொ., பிஎச்.டி.,
காப்பாட்சியர்,
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்
சேப்பாக்கம்,
சென்னை - 5.

பொதுப் பதிப்பாசிரியர்:
நடன. காசிநாதன், எம். ஏ.,
இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை,
சென்னை - 113.

©

தமிழ்நாடு அரசு
1992

விலை ரூ. 43/-

TAMIL NADU GOVERNMENT ORIENTAL
MANUSCRIPTS SERIES NO. 71

# KARUPPAR KULUVA NATAKAM

Edited by
**Dr. S. SOUNDARAPANDIAN,**
M.A.,(Tamil), M.A.(Eng.), B.Ed., Dip. Skt., Ph.D.,
**Curator,**
Government Oriental Manuscripts Library,
Chepauk,
Madras-5.

**General Editor:**
**Natana. Kasinathan,** M.A.,
**Director,**
Department of Archaeology,
Madras-113.

(C)

**GOVERNMENT OF TAMIL NADU**
**1992**

PRICE: Rs. 43/-

# GENERAL EDITOR'S NOTE

Government Oriental Manuscripts Library, situated on the first floor of the Madras University Library has to its credit, published so far, 350 publications. These include books and catalogues of various languages like Tamil, Telugu, Urdu, Sanskrit, Marathi, Kannada and Malayalam.

In order to throw light on the hidden treasure of knowledge, this library has been publishing such books and catalogues which may cause innumerable further researches.

Hence we submit here a drama called **Karuppar Kuluva Natakam,** a rare piece of its kind, edited from a manuscript of Government Oriental Manuscripts Library, before the world of knowledge.

Our thanks are due to The Secreatry, Tamil Development-Culture Department, for his deligent efforts for the outcome of this book.

Our thanks are due to Dr. Muthaiyan, M.Com., Ph.D., Registrar, Tamil University, Tanjore and Mr. S. Palaniappan, Assistant Registrar and Pulavar C. Elangovan, Assistant Director, Publications Department and Mr. Pon. Kothanda Raman, Assistant Director, Publications, Tamil University for their execution of printing of this Tamil drama.

- **Natana. Kasinathan,** M.A.,
Director
Department of Archaeology
Madras - 600 113.

# பதிப்புரை

## மூலச்சுவடி:

இதுவரை அச்சில் வெளிவராதிருந்த இந்நூல், சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் ஓலைச்சுவடி வடிவில் ஆர். 3506 எண்ணில் பாதுகாக்கப் பெற்று வந்ததாகும். ஓலைக்கட்டு பிற்காலத்ததாகையால் சிதைவுறாது நல்ல நிலையில் உளது. எனினும், ஏடெழுதுவோரால் பல எழுத்துப்பிழைகளும் இலக்கணப் பிழைகளும் நேர்ந்துள. அவைகள் இயன்றளவு செப்பம் செய்யப்பட்டுத் திருந்திய நூலாக இங்கு தரப்படுகிறது.

மூலச்சுவடியில், 'திட்டாணிக் கருப்பையா பேரில் குளுவை நாடகம்' என்று காணப்படுகிறது. முதலிரண்டு ஓலைகளில் இதே தலைப்பு இடப்பெற்றுள்ளது.

## தமிழில் குளுவ நாடகம்:

கி. பி. 17-ஆம் நூற்றாண்டுக்குப் பின்பு குறவரை அடிப்படையாகக் கொண்டு யாக்கப்பெற்ற தமிழ் நாடகங்கள் மூன்று திறந்தன. குறம், குறவஞ்சி, குளுவம் என்பன அவை.

மீனாட்சியம்மை குறம், விதுரர் குறம், அண்டவெளிக் குறம், திருக்குருகேசர் மகிழ்மாறன் பவனிக்குறம் முதலியவற்றை குறத்திற்கும்; குற்றாலக்குறவஞ்சி, கும்பேசர் குறவஞ்சி, அழகர் குறவஞ்சி, சோழக்குறவஞ்சி,

வருணபுரிக்குறவஞ்சி முதலியவற்றை குறவஞ்சிக்கும், எடுத்துக் காட்டுக்களாகக் கூறலாம்.

இதுவரை நாம் அறியமுடிகிற குளுவநாடக நூற்கள் ஏழு. அவை

1. அருணாசலம் செட்டியார் பேரில் குளுவ நாடகம்
2. ஏழுநகரத்தார் பேரில் குளுவ நாடகம்
3. கோட்டூர் நயினார் பேரில் குளுவ நாடகம்
4. சின்னமகிபன் குளுவ நாடகம்
5. கருப்பர் குளுவ நாடகம்.
6. குற்றாலக் குளுவ நாடகம்.
7. நாவலங்க நல்லக்குட்டி மேல் குளுவ நாடகம்.

என்பனவாம். இவற்றில், கோட்டூர் நயினார் குளுவ நாடகம் (1899), ஏழுநகரத்தார் குளுவ நாடகம் (1922), சின்னமகிபன் குளுவ நாடகம் (1980) ஆகிய மூன்றும் அச்சாகியுள. தமிழில் குளுவ நாடகங்கள் கி. பி. 18-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரே எழுந்துள.

தமிழ் மொழி வரலாற்றில் இக்குளுவ நாடகங்களுக்குத் தரப்பெற்றுள்ள இடம் குறைவே. இலக்கிய வரலாறுகள் கண்ட பல பெருமக்கள் குளுவம் பற்றிக் குறிப்பிடவே இல்லை. ஆயினும் புதுவதாக முகிழ்த்துள்ள இக்குளுவ நாடக வகையினை அறிதல் மிகவும் இன்றியமையாக் கடனாம்.

குறப்பெண்ணை மையமாகக் கொண்டு எழுந்துள்ள நூல் குறவஞ்சி; இதே போலக் குளுவன் என்பவனை மையமாகக் கொண்டு தோன்றியுள்ள நாடகம் குளுவநாடகமாகும். குறவஞ்சி நூற்களில் வரும் குறவனின் தோழனாகக் குளுவன் சித்திரிக்கப்படுவான். குளுவன், மலைவாணருக்குள்ளே ஒருவகைச் சாதியான். குளுவன் பெயரை வேறு குறவஞ்சிகளின் ஆசிரியர்கள் வேறு வேறாகவும் வழங்குவர்; புலியன், நூவன், சிங்கன் என்பன

அவற்றிற் சில.[1]

குளுவ நாடகங்களில், குளுவனை நூலாசிரியர் சிறப்பாக அறிமுகப்படுத்துவார்; பிறகு குளுவன் பறவைகள் பிடித்தல், குளுவனின் தோழன் சிங்கன் வரல், சிங்கன் வேட்டையாடல், சிங்கி பரிசுப்பொருள் பெற்றதை விளக்குதல் ஆகியன இன்றியமையாக் கதைப்பகுதியாம். சிங்கன், சிங்கி இருவரைக் காட்டிலும் குளுவனே முதன்மையானவாகக் காட்டப்பெற்று நாடகம் திகழ்வதால் குளுவ நாடகம் என்று பெயரமைந்தது.

குளுவ நாடகம் இசைகொண்ட நாட்டிய நாடகமாகும். பொதுமக்கள் துய்க்கும் வண்ணம் இசைபரப்பி, பலரும் களிக்கும் வண்ணம் ஆடல் கொண்ட நாடகம் குளுவ நாடகமாம். பாமரமக்களைப் பாடுபொருளாகக் கொண்டு மிளிரும் குளுவ நாடகம் பாமரமக்களுக்குப் பெருவிருந்தாயமையும் நாடகமாம்.

## குறவஞ்சியும்-குளுவமும்:

மிகப்பழங்காலத்தில் தோன்றிய குறத்திப்பாட்டு எனும் வகையே குறம், குறவஞ்சி, ஆகிய இலக்கியங்களுக்கு அடிப்படையாகும்.

தோன்றியுள்ள குறவஞ்சிகளின் எண்ணிக்கையையும் குளுவ நாடகங்களின் தொகையையும் நோக்கினால், குளுவ நாடகங்கள் குறவஞ்சி நாடகங்களின் ஒரு வளர்ச்சியே என்ற கருத்து எழுகிறது. காலமுறையும் அதை வலியுறுத்துகிறது. இங்கு, பண்டைத் தமிழ் நாட்டில் பரவியிருந்த குறத்திப்பாட்டு உலாவிலக்கியத் தாக்கம்பெற்றுக் குளுவ நாடகத்துடன் இணைந்து, கவிவாணரின் கற்பனைத் திறனால் வளம் பெருகிக் குறவஞ்சி நாடகமாக உருவம்

---

1. உ.வே.சா, கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய பிரபந்தங்கள் (1932), ப. 279.

கொண்டு விளங்குவதாகக் கூறலாம்[2] எனும் கருத்து நோக்கற்பாலது.

இருபதாம் நூற்றாண்டில் பல குறவஞ்சி நாடகங்கள் அரங்கேறியுள்ளன. அழகர் குறவஞ்சி, தியாகேசர் குறவஞ்சி, திருமலையாண்டவர் குறவஞ்சி, வருணாபுரிக் குறவஞ்சி முதலியன மக்களிடையே சிறப்போடு நடத்திக் காட்டப் பெற்ற நாடகங்களாம்.[3] இதே போன்று குறுவ நாடகம் எதுவும் அரங்கேறியதாகத் தெரியவில்லை. மிகச்சுருங்கிய வடிவு என்பது இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். மக்களிடையே நன்கு பரவி நிற்காத இலக்கியம் குளுவ நாடகம் என்பதும் காரணம்.

## கருப்பர் குளுவ நாடகம் - நூற்சுருக்கம்:

முதற்கண் குளுவனும் அவன் தோழனாகிய சிங்கனும் அறிமுகப்படுத்தப்பெறுகிறார்கள். இவ்வறிமுகப் பகுதியில் அவர்களின் திறம் புலனாகின்றது.

> "சற்பன்ன பாவை தடையறப் பேசி
> விற்பன(க்) குளுவன் விரைந்துவந் தனனே"!

என்கிறார் ஆசிரியர்.

குளுவன் தன் ஆற்றல் தோன்றப் பல கூறுகிறான்.

> "விற்பனக் குளுவநானே - பறவை சேர்க்கும்
> விற்பனக் குளுவநானே" (பா. 12)

என்கிறான். இதே பாங்கில் குளுவனின் நண்பன்

---

2. ஏ.என். பெருமாள், தமிழ் நாடகம் ஓர் ஆய்வு (1979), ப. 53

3. ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டு விழாமலர் (1981), ப. 289.

"சிங்கனும் நானே - புராதனச்
சிங்கனும் நானே" (பா. 16)

என்றாங்கு பல பாடுகிறான். பிறகு குளுவன்,

"கண்டே னய்யே - பறவையைக்
கண்டே னய்யே" (பா. 17)

என்று பாடி, பலவிதப் பறவை மாட்சிகளை நவில்கிறான். இவன் பாடும் பல பாக்கள் பறவைகள் வளத்தையும், நாட்டு வளத்தையும் இன்ன பிற சிறப்புக்களையும் கொண்டிலங்கிக் குலுவ நாடகத்தைச் சீர்மிகு அழகு நாடகமாக ஆக்குகின்றன.

தஞ்சமென் றோர்களுக் கஞ்ச லென்றே
வரும்சாமி திட்டாணிக் கருப்பண்ணர் நாட்டினில்
மஞ்சனிக் கண்மாய் மடைப்பாய்ச்சல் வேளாவாய்க்
கால்செல்லி வாய்க்கால் மச்சு முறிச்சானில்
ரஞ்சித மாகிய வண்டாங் குடிவயல்
நாவலடிச் செய்யில் நாச்சியா வாய்க்காலில்
பஞ்சவர் ணக்கிள்ளை வெள்ளைப் பிறாவானம்
பாடிக் குருவியும் கோடிக் கதிகமாய் வருகு தய்யே"!
(பா. 19 - iii)

பிறகு குளுவன், சிங்கனைப் பார்த்துப் பலவிதப் பொறிகளை எடுத்துவரும்படி ஆணையிடுகிறான்.

"யெடுத்துவா கண்ணியடா - பறவை
அடுத்தினி மேயுதடா" (பா. 25)

எனக் கூறுகிறான்.

அதன்பின், எவ்வெவ்விடங்களில் என்னென்ன விலங்கு பறவைகளை வேட்டையாடலாம்; அதன் வழிமுறை என்ன என்பது பற்றியெல்லாம் குளுவன் விளக்குகிறான்.

குளுவன், சிங்கன் அமைத்த கண்ணிகளில் சிக்கிக் கொண்ட பறவைகளைக் கண்டு இருவரும் மகிழ்கின்றனர்.

பட்சிகள் சிக்குச்சய்யே - கண்ணிக்குள்ளே
பட்சிகள் சிக்குச்சய்யே" (பா. 29)

என்று களிகொள்கின்றனர்.

பறவைகளைப் பிடித்துவந்த பின்பு, அவற்றை யார் யாரிடம் தந்து என்னென்ன பெற்றுவரல் வேண்டும் என்ற விளக்கத்தை அளிக்கிறான் குளுவன். சிலவற்றைத் தெய்வங்களுக்குப் படைக்கச் சொல்கிறான்.

"அய்யர் திட்டாணிக் கருப்பருக்கு(க்)
கவுதாரிதானுஞ்
கூட்டாங் கறிக்காகும் கொண்டுபோ வாரி"
(பா. 31 - 3)

எனப் பல கூறல் காணலாம்.

இவை நடந்தபின்பு, குளுவன் தன்மனைவி சிங்கியைக் காணாது தவிக்கிறான்; சிங்கனை ஏவுகிறான் தேடிவர. சிங்கன் சிங்கியைக் கூட்டி வருகிறான்.

வந்த சிங்கி நிறையப் பரிசுப்பொருள்களுடன் வருகிறாள்.

ஒவ்வொரு பரிசுப் பொருளும் யார் தந்தது எனக் குளுவன் கேட்க இன்னார் தந்தது எனப் பதிலுரைக்கிறாள் சிங்கி. இதுவே நூலின் இறுதிப்பகுதி.

காலுக்குத் தான்வெள்ளித் தண்டை
கொடுத்ததார் சிங்கி? -யெங்கள்
கல்வாசல் நாட்டவர் தந்த வெகுமதி சிங்கா!"

எனல் காணலாம். இவ்வுரையாடல் சொல்வளம்

கொண்டதாகவும், எளிமையாகவும், சுவையானதாகவும் சிறக்கிறது.

## நூலாசிரியர்:

கருப்பர் குளுவ நாடகத்தை இயற்றிய ஆசான் பாடுவார் முத்தப்ப செட்டியார் எனும் கவிஞர் பெருமகனராவார்.

இக்கவி செட்டி நாட்டில் காரைக்குடிக்கு அருகிலுள்ள கீழச்சிவல்பட்டி எனும் ஊரிற்பிறந்தவராவார். தந்தையார் பெயர் அழகப்ப செட்டியார். தாயார் பெயர் இலக்குமி ஆச்சி.

ஈண்டு, இதுவரை தமிழுலகு கண்டுள்ள குளுவ நாடகங்களில் பெரும்பாலான செட்டியார் வகுப்புத் தொடர்புடையன என்பது குறிக்கத்தக்கது.

கவிஞர் பாடுவார் முத்தப்பச் செட்டியாரவர்கள் பல நூற்கள் யாத்துள்ளார். இவரெழுதிய செயங்கொண்டார் வழக்கம் எனும் நூலைச் சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் 1955-இல் வெளியிட்டுள்ளது. திருமுகவிலாசம், திவ்ய தேசயாத்திரையின் சரித்திரம், செட்டிமார் வரலாறு, செயங்கொண்ட சோழீசர் பிள்ளைத்தமிழ், பதிற்றுப்பத்தந்தாதி, கலித்துறையந்தாதி, நேமக்கலம்பசம், ஜெயங்கொண்ட சோழீசர் ஊசற்றிருநாமம் முதலிய நூற்களை முத்தப்பர் தமிழுலகுக்கு நல்கியுள்ளார்.

## முத்தப்பர் வாழ்வில் நிகழ்ந்த சுவைமிகு நிகழ்ச்சிகள்:

செட்டிநாட்டில் இன்றைக்கும் பாடுவார் முத்தப்பச் செட்டியார் பற்றிப் பலபடக் கூறுவர். முத்தப்பர் பாடினால் பாடியாங்கு பலித்தது எனப்பலர் கூறுவர். ஆதலின் அத்தகு நிகழ்ச்சிகள் சிலவற்றைக் காண்பது ஆசிரியரை அறிவதற்குத் துணையாம்.

பாடுவார் முத்தப்பர் தொடக்கநிலையில் உப்புவணிகம்

செய்தவர். ஒருநாள் சந்தையில் வணிகம் நடக்காததால் பசியோடு இருக்க நேரிட்டது. அஞ்ஞான்று முத்தப்பருகு வயிறார உணவளித்தார் பிறிதொரு செட்டியார். அப்போது முத்தப்பர் பாடினார்.

"அன்போ மறுசுவையோ டன்னமலித் தாதரவாய் என்பசியைத் தீர்த்துவிட்ட தென்னினமே - பின்னந் நகரத்தார் தங்களிடம் நண்ணிக் குபேரன் பகருகடந் கேட்க வரும் பார்" இப்பாட்டைப் பாடியதிலிருந்து செட்டியார் களுக்குச் செல்வம் பெருகியது என்பர்.

முத்தப்பர் பாட்டுப்பாடி மழையேவா என்றால் மழை வந்தது என்றும் பலர் கூறுவதுண்டு. அவ்வாறு மழைவரப் பாடிய ஒரு வெண்பா.

ஆட்டைக் கவர்ந்தவரை ஆய்யினாய் முன்பெனது பாட்டுக் கிரங்கியருள் பாலிப்பாய் - வாட்டமும் நாட்டுப் பயல்கள் நலமுற்று வாழ்ந்திடவே காட்டுக் கருப்பமழை காட்டு.[4]

கவிஞர் பாடிய ஒரு பாடல் பலர் நாவிலும் பயிந்று வரும் இனிய பாடல் இது. காடுவெட்டிப் போட்டுக் கடிய நிலந்திருத்தி வீடுகட்டிக் கொண்டிருக்கும் வேள்வணிகர் - வீடுகட்கு அன்றைக்கு வந்திட்ட அம்மா இலக்குமி நீ என்றைக்கும் நீங்கா திரு!

## நூலின் காலம்:

மேற்கண்ட சிறப்புக்கள் பெற்ற கவிஞர் யாத்த நூலே இக்கருப்பர் குளுவநாடகமாதலின், அக்கவிஞரின் காலமே நூலின் காலமுமாகும்.

4. மழைவேண்டல், கழகவெளியீடு (1966), ப. 98.

பாடுவார் முத்தப்பச்செட்டியார் அவர்கள் கி.பி. 1810-இல் பிறந்தவராவர்; அவர் இயற்கை எய்திய ஆண்டு 1883,[5] எனவே, கருப்பர் குளுவ நாடகம் கி.பி 19-ஆம் நூற்றாண்டில் எழுந்த தீஞ்சுவை நாடகமாம்; அஃதாவது கி.பி. 1810-க்கும் 1883க்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றிய நூல்கருப்பர் குளுவநாடகம் ஆகும்.

## கருப்பண்ணசாமி மீது இலக்கியங்கள்:

இக்குளுவ நாடகம் கருப்பர் மீது இயற்றப்பெற்றதாம். திட்டாணிக்கருப்பர் எனும் கருப்பண்ணசாமிக்காக ஆண்டு தோறும் இது நடிக்கப்பெற்று வந்திருத்தல் வேண்டும்.

தமிழில் கருப்பண்ணசாமி மீது பாடப்பெற்றுள்ள பிற்கால இலக்கியங்கள் நிறைய உள்ளன.

கருப்பண்ணசுவாமி சதகம் எனும் நூலை மிதிலைப்பட்டிக் கவிஞர் இராமசாமிக் கவிராயவர்கள் எழுதியுள்ளார். 1897-இல் இது அச்சாகியுள்ளது. திருமங்கலம் தாலுகா சதுரகிரி கருப்பண்ணசாமி மீது பாடப்பெற்ற நூலாகிய கருப்பண்ணசாமி பதிகம் எனும் நூலும் அச்சாகியுளது. இவைபோன்ற நூற்கள் மிகப்பலவுள.

"மதுரை மாவட்டத்துத் தெய்வங்களுள் கருப்பண்ணசாமி புகழ்வாய்ந்தது. பதினெட்டாம்படிக் கருப்பன் எனவும் வழங்குவர்.[6] நாயக்கமன்னரின் படைவீரனாகிய மதுரை வீரனே பதினெட்டாம்படிக் கருப்பராக ஆக்கப்பெற்று மக்களால் வணங்கப்பெறுகிறான் எனக் கருதுப.[7]

5. சோமலெ, செட்டிநாடும் தமிழும் (1960), பக். 111, 113
6. Madras District Gazetteer, Vol I (1914), p. 284.
7. ஸ்ரீ கள்ளழகர் கோயில் வரலாறு (1970), அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் வெளியீடு, ப. 44.

பொதுவாகத் தென் மாவட்டங்களில் கருப்பன் என்ற பெயர் புகழ்வாய்ந்ததாகும். பெரிய கருப்பன், சின்னக் கருப்பன், மண்டைக்கருப்பன், தோட்டிக் கருப்பன், கும்மட்டிக் கருப்பன், பழைய கருப்பன், சங்கலிக் கருப்பன் எனும் சிறு தெய்வங்களின் பெயர்களை முகவை, மதுரை மாவட்டங்களில் கேட்கலாம்.

கருப்பண்ண தெய்வங்களுக்கு இன்றியமையாத தெய்வம் மதுரை மாவட்டத்து அழகர்மலையிலுள்ள பதினெட்டாம் படிக் கருப்பரே. இப் பதினெட்டாம்படிக்கருப்பருக்குக் கிருஷ்ணபுத்திரன் எனப் பெயருமுண்டு.

இக்குளுவ நாடக ஆசிரியருக்குக் கருப்பர் மீது பக்தி மிக்குண்டு. அதனால் தன் மக்களில் ஒருவருக்குக் கருப்பன்செட்டி என்று பெயரே இட்டுள்ளார்.[8]

## குளுவ நாடகம் - அமைப்பியல்:

பிற சிற்றிலக்கியங்கள் போன்றே குளுவ நாடகங்களும் ஒரே அமைப்பியலைக் கொண்டவையாகத் திகழ்கின்றன.

நூலின் முதலில் காப்புச் செய்யுட்பகுதி இடம் பெறுகிறது. சில குளுவ நாடகங்களில் ஒரு பாடலும், சிலவற்றில் பல பாக்களும் இடம்பெறுகின்றன. காப்பினை அடுத்துத் தோடையம் அமைகிறது. தோடையம் என்பது நாடகத்தின் முதற்பாட்டாக வருவது. இப்பகுதியும் காப்புப்போன்றே அமைவது. தோடையத்தை அடுத்து மங்களப் பாடல் இடம்பெறும். இதன்பின் அகவற்பாவால் அகவல் எனும் நெடிய பாடல் இடம்பெறுகிறது. இப்பகுதியில் பொதுவாகக் குளுவனின் சிறப்பும், ஊர்ச்சிறப்பும் பிற சிறப்புக்களும் இடம் பெறுகின்றன.

இவற்றின் பின்னர் தரு எனும் இசைப்பாடல்களும்

8. தமிழ்ப்புலவர் வரிசை, பத்தாம் புத்தகம் (1955), ப. 69.

விருத்தங்களும் விரவி வருகின்றன. தரு, பல்லவி, அனுபல்லவி, சரணம் எனக்கொண்டு நல்ல சந்தம் பெற்றுத்திகழ்கிறது. கலிப்பாக்கள் சில இடம்பெருகின்றன. இறுதியில் வாழிவிருத்தம் ஒன்று உள்ளது.

பெரும்பாலும் எல்லாக் குளுவ நாடகங்களுமே இதே அமைப்பியலையே கொண்டு திகழ்கின்றன.

## குளுவ நாடகமா? குழுவ நாடகமா?

இக்கருப்பர் குளுவ நாடகத்து ஓலைச் சுவடியில் குளுவை நாடகம் என்று எழுதப்பெற்றுள்ளது. குழுவ என்று ஓரிடத்தில் கூடக் குறிப்பிடப்பெறவில்லை. ஆயினும் சில குளுவ நாடகச் சுவடிகளில் குழுவ என்று எழுதப் பெற்றுள்ளது.

குறவஞ்சி நாடகங்களில் குளுவன் என்றும் குழுவன் என்றும் இரு வடிவங்களுமே காணப்படுகின்றன. உ. வே. சா. அவர்கள் குளுவன் எனும் வடிவிலேயே பதிப்பித்துள் ளார்கள்.[9] கும்பேசர் குறவஞ்சி நாடகத்தில் குழுவன் என்றே வந்துள்ளது.[10]

'குளுவன்', குழு என்ற சொல்லோடு தொடர் புடையதன்று. ஆகவே, குழு (Group) என்பதனடியாகக் குழுவன் என்பதே சரி எனக் கூறற்கு இடமில்லை.

நாமதீபநிகண்டு, குறிஞ்சி நில மக்களைக் குறிக்கையில் வெங்குழுவர் எனக் குறிக்கிறது.[11] ஆகவே குழுவன் எனக்கூறினால் அது இழுக்காகாது எனல் பெறலாம்.

---

9. சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம் (1932).
10. கும்பேசர் குறவஞ்சி நாடகம் (1944), 3. கல்யாண சுந்தரையர் பதிப்பு.
11. நாமதீப நிகண்டு, வெண்.156.

குழு (Group) அடிப்படையில்லாது, குறிப்பிட்ட ஒரு மலைவாழினத்தவர் பற்றிக் குறிப்பிடுவதால் குளுவன் என்பதும் தவறாகாது. தமிழ்க் கலைக்களஞ்சியம் குளுவ நாடகம் என்றே விளக்குகிறது.[12]

குழுவன் என்பதற்கும் குளுவன் என்பதற்கும் பெரிய வேறு பாடு இல்லை என்பதால், குளுவ நாடகம், குழுவ நாடகம் என்ற இரு வடிவங்களுமே கொள்ளப்பட்டு வருகின்றன.

## நாடக நிகழ்விடம்:

இக்கருப்பர் குளுவ நாடகம் திட்டாணிக் கருப்பர் மீது பாடப்பெற்ற இலக்கியமாகும். ஆதலின் திட்டாணிக் கருப்பர் கோயில் யாங்கு அமைந்துளது என்பது போன்ற விளக்கங்களைக் காணல் கடன்.

முகவை மாவட்டம் காரைக்குடியிலிருந்து சுமார் 13 கல் தொலைவில் கீழச்சிவல்பட்டி எனும் ஓர் ஊர் உளது. இந்த ஊரிலிருந்து சுமார் 2 கல் தொலைவில் உள்ள ஊர் நெய்வாசல். திட்டாணிக்கருப்பர் கோயில் இந்த நெய்வாசல் எனும் கிராமத்திலேயே இன்னும் இருக்கிறது.

இந்த நெய்வாசல் எனும் சிற்றூரையே ஆசிரியர் இக்குளுவ நாடகத்தில் நெல்லை, நெல்லையூர் எனக் குறிக்கிறார். இப்பொழுது நெய்வாசல் என அழைக்கப்படும். சிற்றூர் பண்டு நெல்வாசல் எனவும், நெல்வயல் எனவும் அழைக்கப்பட்டது.

மேற்குறித்த திட்டாணிக் கருப்பர் கோயிலில் சின்னக்கருப்பர், வீரபத்திரர், வயிரவர் முதலிய சுவாமிகள் வணங்கப்பட்டு வருகின்றன. திட்டாணிக் கோயிலருகே திட்டாணி ஊரணி என ஓர் ஊருணி இன்றும் உளது.

---

12. கலைக்களஞ்சியம், தொகுதி 4, ப. 131.

இக்குளுவ நாடகத்தில் வரும் இளணாக் கண்மாய் தற்போது எழனாக்கண்மாய் என அப்பகுதி மக்களால் அழைக்கப்பெற்று வருகிறது. இக்கண்மாய் எழனாப்பட்டி எனும் சிற்றூரில் இருக்கிறது. இதேபோல, மஞ்சினிப் பட்டியில் இருக்கும் பெரிய பாசனக்கண்மாய் மஞ்சினிக்கண்மாய்.

நெய்வாசல் கிராமத்தருகே, வண்டாங்குடிக்கண்மாய் என இந்நூலிற் குறிக்கப்பெறும் கண்மாய் வாண்டான்குடிக் கண்மாய் எனும் கண்மாயும், வாண்டான்குடி வயலும் இருக்கின்றன.

நெய்வாசல் கிராமத்தில் நாச்சியார் ஊருணியும், அதனருகில் உலகநாயகி அம்மன் கோயிலும் இருக்கின்றன. தாழப்பட்டி எனும் ஊரில் உள்ள பாசனக்கண்மாய் தாழக்கண்மாய்.

திட்டாணிக் கருப்பர் கோயிலில் மாசிமாதம் சிவராத்திரிவிழா நடைபெறுகிறது. மறுநாள் தேர்த்திருவிழா நடைபெறும். அதற்கடுத்த நாளில் மஞ்சுவிரட்டு நடைபெறும்; அன்றிரவு கூத்து நடத்துவது உண்டு. திட்டாணிக்கருப்பர் நகரத்தார் எனப்படும் செட்டியார்களின் குலதெய்வமாக இருக்கிறது.

தற்போது திட்டாணிக் கருப்பர் கோயிலுக்கு அருகில் ஈசுவரன் கோயிலும், அதன் பழைய கட்டடமும் இடிந்து போன பெருமாள் கோயிலும் அம்மன் கோயிலும் உள்ளன. ஈசுவரன் கோயிலில் கல்வெட்டுக்கள் சில உள.

மேற்குறித்த இடப்பெயர்களை அறிவது நூல் படித்தற்கு இன்றியமையாததாம்.

**சுவைபொதுளிய நூல்:**

குளுவ நாடகம் யாவர்க்கும் இனிமை பயக்கும்

செந்நூலாம். குளுவ நாடகமேன்மையில் கவிஞர் பாடுவார் முத்தப்பர் ஈடுபட்டுப் பல இடங்களில் அதன் சிறப்புத்தோன்றக் கூறிச்செல்கிறார்.

"சித்திரக் குளுவை நாடகம்" (பா. 6)

"முத்தமிழினால் வரும் குளுவை நாடகம்" (பா. 5)

"குற்றமில்லாத குளுவை நாடகம்" (பா. 4)

"பொருள்சிறந்திடுங் குளுவை நாடகம்" (பா. 7)

"மதுரம் எழுதிய குளுவை நாடகம்" (பா. 8)

என்றெல்லாம் குளுவ நாடகச் சிறப்பில் ஈடுபட்டுக் கூறலைக் காணலாம்.

இழுமென் மொழியில் விழுமியது கூறிச்செல்கிறார் முத்தப்பர்.

"மன்னன் வயிரவன் சின்னண்ணைஞ் சேரு - பத்து
மாடப்பிறா வைக்கொடுத்தை யென்றால்வெகு சீரு"
(பா. 31-8)

"நலமாநம் வீட்டுக்குத் தான்செவ்வல் காடை - ஒரு
நானாறு காண்பிறக்கி வைப்பாயொரு கூடை"
(ப. 31 - 16)

என்பன போன்ற ஓசைநயமிகு பாடற்பகுதிகள் நிறைந்தது இக்குளுவநாடகம்

உவமைகள் ஆங்காங்கு விரவி வருகின்றன.

"செம்மறிக் கிடாயின் திருகுகொம் பதுபோல்
விம்மிய முகத்தில் வீசையுந் திருத்தி"
(பா. 10 - 158, 159)

எனும் பகுதியில் குறவனின் திருகிய பெரிய மீசை செம்மறிக்கடாவின் திருகிய கொம்பு போல இருந்தது என அழகுற உவமிக்கிறார்.

பிறிதோரிடத்தில், கண்ணிக்குள் வைத்திருந்த சிறு உணவுப்பொருளுக்கு ஆசையுற்று மாட்டிக்கொண்ட பறவை களை, வேசையிடம் மால் கொண்டு பணம் இழந்தவர் போல என உவமை காட்டுகிறார்.

"தெட்டிப் பறிக்கின்ற வேசைக்கி மால்கொண்டு
தேடிப் புதைத்த பணத்தை முழுவதும்
கொட்டிக் கொடுக்கின்ற பேயரைப் போலவே"
(பா. 25 _ iv)

என்று பாடல் நோக்கலாம்.

இக்குளுவ நாடகத்தில் கூறப்பெறும் பல்வேறு வகையான பறவைகள் பிடிக்கும் கண்ணிகள் நம்மை மெய்சிலிர்க்க வைப்பன. அஞ்டுகம் பிடிக்கையில் கண்ணியில் ஆலம்பால் தடவு (27 _ xiii) என்கிறார்.

பாடல்கள் நல்ல எதுகை நயம் கொண்டு மிளிர்கின்றன.

"குற்றமில் லாத சாதி
குளுவைநா டகத்தைப் பாட
முற்றமிழ் நாவல் லோர்கள்" (பா. 4)

எனுமடிகளில், 'குற்றமில்' எனும் சொல்லுக்கேற்ப முத்தமிழை, முற்றமிழ் என ஆக்கிக்காட்டியிருப்பது துய்க்கற் பாலது.

இக்குளுவ நாடக்தில் வரும் தரு எனும் இசைப் பாக்கள் எழில்மிகு சந்தங்களுடன் வருகின்றன.

"பைந்தமிழ் சேர்நெல்லைப் பதியினார்க்குயிர்
பாங்காய்க் கருப்பர் நன் னீதியினால்" (பா. 27)

என்று பாட்டுச் செல்வது உள்ளத்தைக் கொள்ளை கொள்வதாக உள்ளது.

குளுவ நாடகம் சிறிதாக இருப்பினும் காட்சிகள் மனக்கண் முன்தோன்றிப் படிப்பாரை இன்பத்தில் ஆழ்த்துகின்றன. குளுவனும் சிங்கனும் பறவைகளைக்கண்டு கூறலும், அவைகளை வேட்டையாடப் பலவிதப் பொறிகள் அமைத்தலும், வேட்டையிற் பெற்ற பறவைகளைப் பலரிடத்துத் தந்துவரலும், சிங்கி பல பரிசுகள் கொண்டு வருவதும், குளுவன் அவற்றை விரைதலும், வினாக்களுக்குச் சிங்கி விடையிறுத்தலும் படிக்குந்தொறும் படிக்குந்தொறும் சுவை பயப்பன.

## சமுதாயப் பின்புலம்:

தமிழக வரலாற்றில் கி. பி. 19-ஆம் நூற்றாண்டு விடுதலை வேட்கையைத் தன்னகத்தே கொண்ட காலம். கட்டபொம்மன் கதைப்பாடல், கட்டபொம்மன் கும்மி, இராமநாதபுரம் பேட்டிவிருத்தம், சிவகங்கை சரித்திரக்கும்மி போன்ற விடுதலை வேட்கை மிகு இலக்கியங்கள் தோன்றிய காலம். ஆயின், இக்குளுவ நாடகத்தில் அத்தகு பரந்த சமுதாயப் பின்புலத்தைக் காண இயலவில்லை. நூவலும் பொருள்சிறியதாக இருப்பதால், பண்டமாற்று, சமுதாயத்தில் ஊர்த்தலைவர்கள், தெய்வங்கட்குப் பலி கொடுத்தல், குறிகேட்கும் பழக்கம் போன்ற சமுதாயத்துக் கூறுகளையே இக்குளுவ நாடகத்தில் காணமுடிகிறது.

பண்டமாற்று முறை சங்க காலத்திலேயே இருந்திருக்கிறது. பாலைக் கொடுத்து அதற்கீடாகத் தானியம் வாங்குவதும் (குறு. 2221), யானைத் தந்தம் தந்து மது பெற்றதும் (அகம். 61), இன்ன பிறவும் சங்க இலக்கியங்களின் காணக்கிடக்கின்றன. அதே போல, இக்குளுவ நாடகத்திலும் பறவைகளை ஈந்து வேட்டி முதலிய பொருள்களைப் பெறுகிறார்கள்.

பறவைகளை வேட்டையாடி முடித்ததும், அவற்றைப் பிறருக்குத் தரும் முன்னர் தெய்வத்துக்குப் படைக்கும் பழக்கத்தினைக் காணுகிறோம்.

கிராமப்புறங்களில் ஊர்த்தலைவர்களின் செல்வாக்கு அன்று மிகுதி; இன்று குறைவு. மிகுதியாக இருந்த ஒரு தோற்றத்தை நன்கு தருவது குளுவ நாடகம். ஒவ்வொரு பெரியவராகச் சொல்லி, அவர்க்குப் பறவை கொடுத்துவரச் சொல்வதின்றும் இதனைத் தெளியலாம்.

சத்தியவான் களங்காப்புலி சேர்வைதான் பெறுவான்
அவன்
வீட்டுக்குப் பத்துப்பிறா கொடுலேஞ்சு தருவான்"
(பா. 31 _ 10)

என்றாங்கு காணலாம்.

## நூல் குறிக்கும் ஊரணிகள், கண்மாய்கள், வயல்கள்:

சாலைகள், கிணறுகள், வாய்க்கால்கள் போன்றவற்றுக்குப் பெயரிட்டு அழைப்பது பழம் மரபு. ஆதிச்ச வாய்க் கால்,[13] ஆழ்வார் குளம்,[14] என்றெல்லாம் குறிக்கப் பெற்றமை நோக்கலாம். இதேபாங்கில், இக்குளுவ நாடகத்தில் பல நீர் நிலைகளும் வயல்களும் பல்வகைப் பெயர்கொண்டு அழைக்கப் பெறுகின்றன.

வண்டாங்குடிக் கண்மாய், புதுக்கண்மாய், மஞ்சனிக் கண்மாய், நரசிங்கன் கண்மாய், இளணாக் கண்மாய், கோயிலான் கண்மாய், உள்ளத்துக் கிணறு, தாழக்கண்மாய், திட்டாணிக் குளம், கொடிக்கால் ஓடை, பெரியமடைப் பட்டத்து வாய்க்கால், திருமேனி வாய்க்கால், பாதாள வாய்க்கால், செல்லி வாய்க்கால், நாச்சியா வாய்க்கால்,

---

13. S. I. I Vol. 3 pt. 4, p. 26.
14. Ibid, p. 2.

புரிகண்டன் வாய்க்கால், தாழை வயல், அரசடி செய், வாகைச் செய், ஊத்துக் கிணறு, வீரன் வாய்க்கால், அய்யனார் உம்பளம், வேளான் செய், மண்ணுக்குளக் கரைச்செய், பெருமாள் வாய்க்கால், நம்பியான் செய், ராமவேளான் தோப்பு, உலகாயிக் குளம், கொத்துக் கணக்கன் செய், தேவன் வாய்க்கால், தொழிலாளிகள் உம்பளம், ராமவேளான் தோப்பு, கோர்வைச் செய், சுந்தரி ஊரணி, கருங்காலி செய், கருப்பர் கிணறு, மருதையடிக் கிணறு, சிவன்சன்னதிச் செய், செம்பியான் வாய்க்கால், ஆத்திப்பட்டி வயல், செட்டிக் கண்மாய், வேப்பஞ் செய், குஞ்சான் வயல், கொல்லன் செய், கான வேளான் செய் முதலிய பெயர்களைக் காணலாம்.

இவற்றில் பல இன்றும் இதே பெயர்களுடன் வழங்குகின்றன.

மேற்குறித்த பெயர்கள், சாதிப் பெயர்களாலும், வீரர் பெயர்களாலும், தெய்வப் பெயர்களாலும் அமைக்கப்பட்டுக் கிடப்பதை அறிதல் தகும்.

## பறவைகள்:

குளுவ நாடகங்களில் எண்ணற்ற பறவைகள் குறிப்பிடப் பெறுகின்றன. வேட்டையாடல் இந்நாடகத்தின் இன்றி யமையாத கூறாகையால் பல்வேறு வகையான பறவைகள் காட்டப்பெறுகின்றன. இக்கருப்பர் குளுவ நாடகத்தில் குறிக்கப்பெறுபவை:

புறா, காடை, கவுதாரி, கொக்கு, நீர்க்காக்கை, அன்னம், ஆலா, பருந்து, ஆந்தை, தாரா, மயில், சிறகி, உள்ளான், மாடை, நாரை, அன்றில், கூழக்கிடா, சிச்சிலிப்பான், குருகு, நாரை, பஞ்சவர்ணக்கிளி, வானம்பாடி, நாகணப்புள், தூக்காணிப்பட்சி, மாரிக் குருவி, செம்போத்து, கம்பளி நாரை, ஆள்காட்டிப் பட்சி, வெள்ளைக்கிளி, முட்டைச் சிறகி, முதலிய பறவைகள் பேசப்படுகின்றன.

# காப்பு

## விருத்தம்

1. திருமகள் நிதமு முலாவிச்
சிறந்திடும் நெல்லை யூரில்
கருமுகில் யெனுந்திட் டாணிக்
கருப்பண்ண சுவாமி மீதில்
குருவருள் அதனால் செஞ்சொற்
குளுவைநா டகத்தைக் கூற
தருகரன் ஐந்து லாவுஞ்
தந்திமா முகன்காப் பாமே

---

1. திருமகள் - இலக்குமி

கருமுகில் - கரியமேகம்

தருகரன் - வழங்கும் கை

தந்திமாமுகன் - விநாயகன்

தந்தி - ஆண் யானை.

"தந்தியு பிடிகளுந் தடங்க ணோக்கின"

(கம்பரா. சித்திரகூட.43)

# சுப்பிரமணியர் துதி

2. நிலைத்திடும் புகழ்சேர் கீர்த்தி
நெல்லையம் பதியின் வானர்
கலைத்திடும் அவன் திட் டாணிக்
கருப்பண்ண சுவாமி மீதில்
குலைக்குறி யுரைக்கும் சாதிக்
குளுவைநா டகத்தைப் பாட
மலைக்குயர் செகண் டி வெற்பான்
வள்ளிநா யகன்காப் பாமே

---

2. கீர்த்தி - புகழ். "விண்சுமந்த கீர்த்தி வியன்மண் டலத்தீசன்"
(திருவாச. 8,8)

பதி - ஊர். "பதியெழு வறியாப் பழங்குடி"
(சிலப். 1, 15)

வானர் - தேவர். "மான்முதல் வானர்க்கு"
(திருக்கோ. 155)

கலைத்திடும் - நீக்கிடும்.

குலை - அம்பு.

சிகண்டி - மயில். "நீலச் சிகண்டியி லேறும் பிரான்"
(கந்தரலங். 26)

வெற்பு - மலை. "மால்வரை நிவந்த சேணுயர் வெற்பில்"
(திருமுரு.12)

வள்ளிநாயகன் - முருகன்.

# அய்யனார் துதி

3. பரிவுகூர்ந் தன்பர் வேண்டும்
படிதரு நெல்லை யூரில்
கரிபரி யுன்திட் டாணிக்
கருப்பண்ண சுவாமி மீதில்
குருபரன் அருளைப் பெற்ற
குளுவைநா டகத்தைப் பாட
அரியரன் அருள்திட் டாணி
அய்யனார் காப்ப தாமே

---

3. கரி - யானை

பரி - குதிரை. "பரிமேற் கொண்டான்" (திருவாச. 8,3)

குருபரன் - குமரன்

அரி - விஷ்ணு

அரன் - சிவன்

# கற்றறிந்தோர் காப்பு

## இதுவுமது

## விருத்தம்

4. நற்றமிழ்க் கிசைந்த நெல்லை
 நகர் தழைத் தோங்க வந்தோன்
கற்றவர்க் கருள்திட் டாணிக்
 கருப்பண்ண சுவாமி மீதில்
குற்றமில் லாத சாதி
 குளுவைநா டகத்தைப் பாட
முற்றமிழ் நாவல் லோர்கள்
 முண்டகப் பதங்காப் பாமே!

---

4. முத்தமிழ் - மேல் எதுகை நோக்கி வலித்தது.

முத்தமிழ் - இயல், இசை, நாடகம்
"மும்முரசு முத்தமிழும்" (வள்ளுவமா.10)

முண்டகம் - தாமரை. "முண்டக வதன மழகெழ"
(திருவாலவா. 37, 58)

# தோடையம்

## அகத்தீசர் துதி

5. அறமுங் கீர்த்தியும் பொறையுஞ் சேருந்
திட்டாணிக் கருப்பண்ண சுவாமிமேல்
குறைவில் லாத முத்தமிழி னால்வருங்
குளுவை நாடகம் கூறவே
பிறைய ணிந்த மும்முலைத் தடாதகை
பெரிய நாயகி பாகர்மேல்
யிறைவர் நெல்லையம் பதியிற் றிருஅகத்
தீசர் மலரடி போற்றுவோம்!

---

5. மும்முலைத் தடாதகை – பார்வதி; மலயத்துவச பாண்டியன்யாகம் செய்கையில், பார்வதி மூன்று முலைகளையுடைய குழந்தையாக அவதரித்தாள் என்ப.

பெரியநாயகி பாகர் - பார்வதியைத் தன் உடலில் ஒரு பாகமாகக் கொண்ட சிவன்.

பொறை – பொறுமை. "வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை"

(குறள்.153)

## உலகநாயகி துதி

6. நீதமே வுங்கல் வாசல் நாட்டினில்
நெல்லை யம்பதி வாசனாம்
ஆது லர்க்குருள் புரித யாளன்
திட்டாணிக் கருப்பண்ண சுவாமிமேல்
கோதில் லாதசெந் தமிழினால் சித்திரக்
குளுவை நாடகம் கூறவே
மாதலம் பணியும் உலக நாயகி
மங்கை மலரடி போற்றுவாம்!

## மஞ்சனிக் காடர் துதி

7. தருணம் வேளையில் புலவர் குடிகளை(த்)
தாங்கும் நெல்லைநன் னகரில்வாழ்
அருள்த யாபர மூர்த்தி யான
திட்டாணிக் கருப்பண்ண சுவாமிமேல்
பொருள்சி றந்திடுங் குளுவை நாடகம்
புகழுந் தமிழ்தனைப் பாடவே
கருணை யாளரென் அய்யா மாஞ்சனிக்
காடர் பதம்பணிந் தேற்றுவாம்!

---

6. நீதம் - நீதி. "பொல்லாத சேயனில் தாய்தள்ள
ளீதமோ" (தாயு. சுகவாரி.3)
ஆதுலர் - எளியார் "ஆதுலன் மூத்தான்" (ஆசாரக்.101)
கோது - குற்றம். "கோதியல் காமம்" (சீவக.233)
மாதலம் - உலகம்.
உலகநாயகி - பராசக்தி

7. தருணம் வேளையில் - துன்பம் வரும்வேளையில்
தயாபரன் - கருணையுடையவன்.
தானே யாகிய தயாபர னெம்மிறை (திருவாச.2.96)
பதம் - பாதம்.
எறிபதத்தா னிடங்காட்ட (புறநா.4)

# வீரபத்திரன் துதி

8. எதிரி யெனவருந் துஷ்ட பூதங்கள்
யேங்கித் தூங்கிப்பின் வாங்கவே
அதிர நடமிடும் பரியில் வருகுந்
திட்டாணிக் கருப்பண்ண சுவாமிமேல்
மதுரம் எழுதிய குளுவை நாடகம்
வரிசை(த்) தமிழ்தனைக் கூறவே
சதுரன் வாழ்க்கையான் வீர பத்திரன்
சாமி மலர்ப்பதம் பணிகுவாம்!

தோடையம் முற்றும்.

---

8. மதுரம் - இனிமை

வரிசை - நற்சிறப்பு

சதுரன் - கற்றவன்

## மங்களம்

9. சோதிநெல்லை வாசருக்கும் சூரியப்பிர காசருக்கும்
ஆதியகந் தீசருக்கும் மங்களம்!
திட்டாணிக் கருப்பண்ண ருக்கும் மங்களம்!
வீரபத்திர தேவருக்கும் வீரியப்பிர தாபருக்கும்
ஆரமுற்ற மாரருக்கும் மங்களம்!
திட்டாணிக் கருப்பண்ண ருக்கும் மங்களம்!
வரதன் விபேகருக்கும் வாசவன் தியாகனுக்கும்
அதரணி தேகனுக்கும் மங்களம்!
திட்டாணிக் கருப்பண்ண ருக்கும் மங்களம்!
சங்கினி பாலனுக்கும் சங்கீத லோலனுக்கும்
அங்கமுயற் சீலனுக்கும் மங்களம்!
திட்டாணிக கருப்பண்ண ருக்கும் மங்களம்!

மங்களம் முற்றும்.

---

9. மாரன் - மன்மதன்

வரதன் - விஷ்ணு

விபேகர் - வலிமையுள்ளவர்

தியாகன் - சிவன்.

சங்கினி - சங்கங்குப்பி.

சங்கீதலோலன் - சங்கீதத்தில் நாட்டமுடையவன்.

# நடுக்கந்தீர்க்கும் பதினெட்டாம்படிக் கருப்பர்

## அகவல்

10. மந்திர கிரியை மத்தெனச் சுற்றுஞ்
சந்திரன் காம்பு தானென யிணக்கி
வாசுகி கயறா வானவர் அசுரர்ள்
பாசமுற் றெழுந்து பார்க்கடல் அதனை
அன்புடன் கடைய அமுர்தத்தி னுடனே

பின்புவந் துதித்த பெண்ணுக்கு மகவான
அந்தணர் விர்மா அங்குசன் தனக்கு
சுந்தரம் நிறைந்த சோதர னானோன்
கயிலையை யீன்ற கடவு ளிவனுக்கு
மயிலே றவர்க்கும் மைத்துன னானோன்

---

10. பாற்கடல் கடைந்தது - தேவர், அசுரருடன் பெருயுத்தம் செய்து மடிந்ததால், மடியா மருந்து விரும்பித் தேவர் கடலைக் கடைந்தனர். அப்போது, மந்தர மலையை மத்தாகவும், சந்திரனை தறியாகவும் வாசுகியை நாணாகவும் கொண்டனர். அஞ்ஞான்று பிறந்தவள் திருமகள், இத்திருமகளான இலக்குமி மகன் பிரம்மா.

விர்மா - பிரம்மா

அங்குசன் - பிள்ளையார்

கரிதனை யுரித்த கன்றுதன் னுமையான்
மருகனென் றழைக்கும் மகிழும் பிரதாபன்
தேசகர் பணியுந் திட்டாணி அய்யனார்
வாசலில் துலங்கும் மதிமந்த்ரி யானோன்
சோம்பலில் லாமல் துலங்கியென் னாளும்

பதினெட்டாம் படியில் பாங்குட னிருந்து
பூட்டக மாகி பொய்யையும் மெய்யையும்
நாட்டிலுள் ளோர்க்கு நடுக்கந் தீர்ப்போன்

---

உமையான் - சிவன்

பிரதாபன் - விஷ்ணு

கரிதனை உரித்தவன் - யானை வடிவில் தேவர்களைத் துன்புறுத்திய கயாசுரனைக் கொன்று, அவன் தோலையுரித்துப் போர்த்து கஜாரி மூர்த்தி எனப் பெயர்பெற்றார் சிவன்.

அய்யனார் - திருமால் மோகினி வடிவுகொண்டு சிவனைக் கூட, பிறந்த குழந்தையே அய்யனார் என்ப.

துலங்கும் - பிரகாசிக்கும்

பூட்டகமாகி - பகட்டாக நின்று

# ஐம்பத்தாறு தேசத்தோர்க்கும்-அருளுங் கருப்பன்

கொங்கு வங்காளம் குடுகு பாஞ்சாலம்
சிங்களம் டில்லி சீனம் மரா(ட்)டம்

அச்சிகைக் கோவை அங்கந் தெலுங்கம்
கொச்சி யாட்பாணம் கொழும்பு கர்நாடம்
வச்சிரங் காசி வங்கம் மருளம்
தெட்சண விதர்ப்பம் தென்மலை யாளம்
காவேரி நாடும் கனவகை நாடும்

---

கொங்கு - தற்போதைய கோவை, சேலப் பகுதி

குடுகு - குடகு

சிங்களம் - இலங்கை

மராட்டம் - மஹாராஷ்டிரா.

சேதம் ஐம்பத்தாறு:அங்கம், அருணம், அவந்தி, ஆந்திரம், இலாடம், யவனம், ஒட்டியம், கருசம், கலிங்கம், கன்னடம், கர்நாடம், காசம், காசிமீரம், காந்தாரம், காம்போஜம், கிராமம் குருகு, குடகம், குந்தளம், குரு, குலிந்தம், கூர்ச்சரம், கேகயம், கேரளம், கொங்கணம், கொல்லம், கோசலம், சகம், சவ்வீரம், சாலவம், சிங்களம், சிந்து, சீனம், சூரசேனம், சோழம், சோனகம், திராவிடம், துளுவம், தெங்கணம், நிடதம், நேபாளம், பாஞ்சாலம், பப்பரம், பல்லவம், பாண்டியம், புலிந்தம், போடம், மகதம், மச்சம், மராடம், மலையாளம், மாளவம், யுகந்தரம், வங்கம், வங்காளம், விதர்ப்பம்.

கோவாரு மானை கொந்தி கேதாரம்
தரும்புலி அன்பத் தாருதே சர்க்கும்
திருவினை யாடல் செய்துமா னிடர்க்கும்
வரமது கொடுத்து மாபூசை கொண்டு
புரவலர் பணியும் புகழும் பிரதாபன்

அகத்திய முனிவர் அருந்தமிழ் பகர்ந்த
புகழ்பெரு மகிமை பொதிகைமா மலையான்
யிகபரங் கொடுத்து யெல்லோரும் மகிழப்
புரவியி லேறும் புகழும் பிரதாபன்
மகரமீ னுலாவும் வைகைமா நதியான்

முத்திடைப் பவளம் முறத்தினில் கொழித்துக்
கற்றவர்க் குதவுங் கல்வாசல் நாடன்
அறைக்களஞ் சிறஞ்சேற் அனேகக் கழனிகளும்
நிறையநெல் விளையும் நெல்லையம் பதியான்
மாதர்கள் மயலால் வண்டு கிள்ளைகளைத்

---

புரவலர் - கொடையாளன்.

மகிமை - பெருமை. "மங்கல மகிமை மாநகற்" (திருப்பு.16)

இகபரம் - இம்மை மறுமை

புரவி - குதிரை. "கதழ்பரிப் புரவி" (பதிற்றுப். 80, 13)

முறம் - சுளகு. "முறஞ்செவியானை" (புறநா.339)

களஞ்சியம் - பண்டகசாலை

கழனி - வயல். "கழனியுழுவர்" (புறநா. 13, 11)

மயல் - இச்சை.

தூதுவிட் டழைக்கும் துளபமா ளிகையான்
கடல்தனைத் தாண்டி(க்) கருதலர் காட்டப்
படைதனை முறிக்கும் பச்சைவாம் பரியான்
துட்டர்கொட் டங்களைத் துதிக்கையால் பிரித்து
மட்டமா யறுக்கும் மதவா ரணத்தான்

மலைமக ளிருக்கும் வகைகளை யறிய
அலைகடல் தாண்டும் அனுமக் கொடியான்
வினையேனென் சாமி யெனத்துகிப்போர்க்கு
பயமில்லை யென்று பகரும்மும் முரசான்
ஏழையோர் அறிய யிளையனும் முரடர்

தாளைரெண் டாகத் தரிக்குமா ணையினான்
காதளவு கண்ணியர்கள் தூதுவிடு மோகன்

---

துளபம் - துளசி. "தொடையொத்த துளவமுங் கூடையும் பொலிந்து" (திவ். திருப்பள்ளி.10)

கருதலர் - பகைவர்

வாம்பரி - தாவும் குதிரை

வாரணம் - யானை. "புகர்முக வாரணம்" (மணி. 7, 115)

காதளவு கண்ணியர்: "காதள வளவெனு மதர்விழி" (கலிங்.கடை .1)

தரித்தல் - அணிதல். "தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே" (மனோன். தமிழ்த். 13)

மோகன் - மன்மதன்

நீதமுட னோதுகவி ஊரறி விபேகன்
சீதா தயாவும் சுதாகர வைபோகன்
நாதாவும் நிதமும்யென் மீதுலாவு யோகன்

பதிக்கு வளராசன் யிரவி குலபோசன்
வரமுதவு நேசன் மதிமுக விலாசன்
பூவையர்கள் மாரன் தேவிரதி காரன்
மாவலிய சூரன் காவிலுமு தாரன்
பாதாளவி பாடன் பல்கலைநெ ரூடன்

கருதுயில் சேடன் கல்வாச னாடன்
சங்கீத லோலன் சங்கினி பாலன்

---

நீதம் - தகுதி

விபேகன் - அறிவுள்ளோன்

சீதா தயா: அசோக வனத்தில் தனக்குத் துன்பம் செய்தவர்களைப் பின்னர் பொறுத்தருளியதால் என்க.

சுதாகரன் - சந்திரன்.

இரவி - சூரியன். "கண்ணா ரிரவி கதிர்வந்து கார்காப்ப" (தேவா.1029,7)

மதி - சந்திரன். "மதிப் பின்னீர பேதையர் நட்பு" (குறள். 782)

பூவையர் - பெண்டிர். "போதல் காரியமென்றனள் பூவை (கம்பரா. சூளா.26)

சேடன் - ஆதிசேடன், திருமால்.

துங்கனது சீலன் சுபலளித லோலன்
மாமதுர வாயன் வளசம்பிர தாயன்
பூமிபுக ழரியான் புலவோர் சகாயன்

மலைச்சிக ரங்களில் மாயமாய்த் திரிவோன்
தாமரை மலர்போல் தளிர்க்கும் மேனியினான்
உலகம் முழுமையும் உறைதவத் தாண்டோன்
சனியும் ராசாவும் சந்திர சூரியரும்
யினிய செவ்வாயும் யிராகு கேதுகளும்

பகைசெய்யும் போது பத்தர்சோம் பாமல்
சுகங்களைக் கொடுத்து துயர்தவிர்த் திடுவோன்
கயமுகத் தொந்தி கற்பக மூர்த்தி
செயமிகப் பெருகுந் திருஅகத் தீசர்
அரியநா யகியென் றமரர்கள் பரவும்

பெரியநா யகியால் பெருகுந் தெய்வங்கள்

---

துங்கன் - மேன்மேயோன் - "அபிமான துங்கன் செல்வனைப் போல" (திவ். திருப்பல்.11)

லளிதம் - இங்கிதம்

மதுரம் - இனிமை "மதுர மானமொழி பதற வான் விழி" (கலிங். கடை_34)

உறைதல் - தங்குதல் "உம்ப குறைவார் பதி" (நாலடி .137)

பத்தர் - பக்தர் - அடியவர்

செயம் - வெற்றி

அமரர் - தேவர். "அமரர்ச் சுட்டியும்" (தொல். பொரு. 146)

# தெய்வங்கள் பலகாக்கும் நெல்லைநகர்

மாதனஞ் சேரும் மஞ்சனிப் பதியில்
ஆதனம் புகழும் அழுகு(க்) கருப்பர்
சுந்தரக் கருப்பற் சொல்தவ றாதவர்
செந்தமிழ்க் குதவுந் திம்மெப்பா ராசர்

ஜெகந்தொழும் பத்தர் திட்டாணி அய்யனார்
மகிழ்ந்திடும் அரசும் மகன்கன்னி மாரும்
பரிவுகூர்ந் திருக்கும் பண்டார சுவாமியும்
அருந்துணை படைத்த அழகு தேவியும்
யாவரும் பணியும் கூத்தாடி அம்மாள்

பேரினி லுயர்ந்த பெரிய கருப்பர்
சின்னக் கருப்பர் செயவீர பத்திரர்
அன்னங் கொடுக்கும் அடைக்கலங் காத்தார்
வாக்குத் தவறா வயிரவ மூர்த்தி
பாக்கியங் கொடுக்கும் பண்டார நாதர்

---

தனம் - செல்வம்

ஆதனம் - உண்மை

செகம் - உலகம். "செகத்தை யெல்லாம்" (தாயு.தந்தைதாய்.6)

பரிவு - அன்பு. "பரிவுதப வெடுக்கும் பிண்ட நச்சின்" (புறநா.184)

பேர் - புகழ். "பேர் பரந்த பிரமாபுர மேவிய பெம்மான்" (தேவா.62,3)

அன்னம் - சோறு

வாக்கு - சொல். "வாக்கினாற் றொருட்டுவா ரில்லை" (கம்பரா.பிரமா.201)

பாக்கியம் - செல்வம்.

பேச்சி சடாமுனி பிராமணக் கன்னிகை
காட்சிதந் தருளும் காளிம யேஸ்பரி
உதவியா தரிக்கும் உலகநா யகித்தாய்
வதனசந் திரோதய மாதக னாச்சியும்
அத்திமேல் பவனி அடைக்கலங் காத்தார்

சத்தியம் தவறா தடிகார சாமியும்
சித்தசன் மைத்துனன் சின்னக் கருப்பர்
கொற்ற வேளர்கள் கொண்டாடுந் தெய்வம்
பொன்னாடு செல்வி புகழ்நாச்சி யாரும்
நன்னாடு புகழும் நந்தர்கோன் கோவில்

மஞ்சான மேனி வலம்புரிப் பிள்ளையார்
அஞ்சான தேவதை அருள்தந்து காக்கும்
விரைசெறி குழலாள் விரையடி யம்மன்
பெரிய கருப்பர் பிரபலஞ் சேரும்
பொன்னாடு செல்வி புடைசூழ மேவி

---

மகேஸ்வரி - பார்வதி

அத்தி - கடல்

அஞ்சான தேவதை - பகைவர்க்கு அச்சம்தரும் தெய்வம்
"அஞ்சுவரத் தகுந" (புறநா.41)

விரை - வாசனை. "விரைசெறி கமலப்போதில்"
(கந்தபு. திருவவய.100)

புடை - பக்கம். "ஒருபுடை பாம்புகொளினும்"
(நாலடி 148)

மேவி - அடைந்து. "மேகநாதன் புகுந்திலங்கை
மேயநான்"
(கம்பரா. திருவவ.10)

யென்னாளும் ஓங்கு-யிலங்கும் நெல்லையிலே
அத்தர் திட்டாணி அய்யர் வாசலுக்குக்
கர்த்தராய் வந்த கருப்பண்ண சுவாமி
ராச விசையர் ரகுநாத பரதர்
தேசாதி பத்தியன் தென்கொடி யூரன்

சுந்தர மேருந் தொண்ட மானார்தம்

---

இலங்கும் - விளங்கும்

அத்தர் - தலைவர்

கர்த்தர் - அதிகாரி, காவலன்

தென் - அழகு "மதனன்றன் தென்னீருருவமழிய"
(தேவா. 1155, 4)

சுந்தர மேருந் தொண்ட மானார்தம்
சிந்தையில் மகிழும் ஜெயவிக்ர மார்க்கன்
தயவுபெற் றிலங்கும் ஜனகபாஞ் சாலன்
நயராக சாமி ராங்கியத் தேவர்
தனபதிச் சயசாம் பிராச்சிய லோலன்

மனதினில் கடியராய் மகிழும் பிரதாபன்
கருமுகில் நிகராக் கல்வாசல் நாட்டுத்
துரையென வந்த துங்கவங் களங்கன்
வரமது கொடுக்கும் வாச்ச மாகாளி
சித்தத்தி லந்தியும் தினமமர் அரசி

பொன்னிக ரில்லா புகழ்நெல்லை யூரில்
சகலத்திர பேரையும் சந்ததங் காப்போன்
கருதுந் திட்டாணிக் கருப்பண்ண சுவாமி
நிருபவேள் வளர்சேர் நெல்லைநாட் டினிலே

## சிங்கன் வலை கண்ணிகள் கொண்டுவருதல்

விந்தையாய்ப் பட்சி வேட்டையா டுதற்கு

---

நயத்தல் - சிறத்தல்

தனபதி - குபேரன்

முகில் - மேகம். "நன்னிற மேக நின்றது போல" (சிலப். 11, 46

துரை - தலைவன். "கொஞ்சந் துரையே யருள்" (திருப்பு.70

வாச்ச - வாய்த்த
அந்தி - பொருந்தி
சந்ததி - பரம்பரை
நிருபன் - அரசன்

அந்தமாய்ச் செயித ஆகாச வலையும்
பெரும்பிறாப் பிடிக்கும் பேரண்ட வலையும்
கரும்பிறாப் பிடிக்கும் கருங்கண்ணி வலையும்
காடையின் தட்டுங் கவுதாரிக் கூடும்
குருகின் வலையும் கொக்குமுக் கூடும்

பரியின்வால் மயிரால் படிந்தகண் யளும்
நீர்(க்)காக்கை எட்டும் நிலைவலைச் சுருக்கும்
~~காக்கைகள் பிடிக்க கண்ணியுங் கயறும்~~
பேடன்னம் பிடிக்க பெருங்கண்ணி வலையும்
காடுபோய்ப் பாயும் கவுதாரிக் கூடும்

சிறப்புடன் வலையைச் சேர்த்தொரு
   சுமையாய்(க்)
குறப்பயல் சிங்கன் கொண்டுதான் வரவே
தண்டையுஞ் சிலம்புந் தாளினில் அணிந்து
கொண்டையில் சித்துங் குலிசமும் புனைந்து
கையில்மோ திரமும் கடையமுந் தரித்து

---

அந்தம் - அழகு
பிறா - புறா
காடை, கவுதாரி, குருகு, கொக்கு - பறவைகள்.
கண்ணி - சுருக்குக் கயிறு

பரி - குதிரை "பரிமேற் கொண்டான்" (திருவாச.8,3)
பேடு - பெண்ணினம்
கண்ணி என்பது கன்னி எனப் பல இடங்களில்
ஓலையிற் காணப்படுகிறது.

தண்டை, சிலம்பு - பெண்டிர் கால் நகைகள்.
கடையம் - கடகம் - கைவளை.

தையல்அங் கியின்மேல் சாலுவை யிலங்கக்
கதித்தசல் லடமுங கச்சையுங் கட்டி
பதித்தகல் வயிரப் பதக்கமும் பூட்டி
கருக்கனும் முருகும் காதினிற் பூண்டு
ஒடுக்கமாய்ப் பொற்குச் சுருமா லணிந்து

வளரி குத்தீட்டி மருவுஞ் சித்தருவாள்
அழகு(ப்)பூண் பிடித்த ஆயுத மெடுத்து
ஆவாரை யெருக்கில் அடர்ந்தபுல் லுருவி
வாவிசெர் ஆல மரத்தின்கிளை கொண்டு
மங்கள(ப்) பொதிகை மலையில்மூ லிகையும்

கொங்கணர் கொடுத்த குழிநரிக் கொம்பும்
சூரிய கிரணந் தொட்டிடும் போது
கோரிக்கை யான குலிசமுஞ் சேர்த்து
சந்தனம் பனிநீர் சவ்வாது பூசி
சுத்த வட்டத் திலதமுந் தீட்டி

---

சல்லடம் - குறுங்காற்சட்டை
கச்சை - வார், கயிறு.
கடுக்கன், முருகு - காதணிகள்

வளரி - எறியும் ஓர் ஆயுதம்.
மருவுதல் - சேர்தல் "மருவு சாயல்" (சீவக.725)
சித்தருவாள் - சிறிய அரிவாள்.
வாவி - குளம் "மன்னு தண்பொழிலும் வாவியும்" (திவ்.பெரியதி.2,3,10)

குழிநரி - குள்ளநரி
கொம்பு - பல்.
கோரிக்கையான - விருப்பமான
பனிநீர் - ஒரு வாசனை நீர்
திலதம் - நெற்றித்திலகம்

குப்பியில் கிடந்து கொதித்திடுஞ் சரக்கும்
மைத்தநாள் புளித்த மதுதனைப் பொசித்து
செம்மறிக் கிடாயின் திருகுகொம் பதுபோல்
விம்மிய முகத்தில் வீசையுந் திருத்தி
நீணிலம் புகழும் நெல்லையம் பதியில்

ஆணிய சபையில் அனைவரு மகிழ
சற்பன்ன பாஷை தடையறப் பேசி
விற்பன(க்) குளுவன் விரைந்துவந் தனனே!

---

மைத்தநாள் - மற்றநாள், அடுத்தநாள்

பொசித்து - புசித்து

வீசை - மீசை

நீணிலம் - நீள்+நிலம் - பரந்த உலகு

ஆணிய - உறுதியான

சற்பன்ன பாஷை - பலவித மொழிகள்

விற்பன் - விற்பன்னன் - புதுமையான செயல்களைச் செய்யும் ஆற்றல் மிக்கவன்.

# "புகழ்பூத்த நாட்டின் விற்பனக் குளுவன் நான்!"

## விருத்தம்

11. யெதிர்த்திடு மருவார் நெஞ்சில்
கூடி யிரவலர் கூத்தாடும்
மதித்திடுங் குடிசேர் நெல்லை
மாநகர் தனிலென் னாளும்
கதித்திடும் புகழ்திட் டாணிக்
கருப்பண்ண சுவாமிபேரை.
விதத்துடன் பாடி யாடும்
விற்பனக் குளுவன் நானே!

---

11. மருவார் - பகைவர்

இரவலர் - பொருள் வேண்டி நிற்போர்.
"இரவன் மாக்க ளீகை நுவல" (புறநா.24,30)

கதித்திடும் புகழ் - மிகுதியாகும் புகழ்.

# தரு

## பல்லவி

12. விற்பனக் குளுவநானே பறவை சேர்க்கும்
விற்பனக் குளுவநானே

## அனுபல்லவி

விற்பனக் குளுவநானே மேவிய நெல்லையம் பதியில்
அற்புதஞ் சிறந்த திட்டாணிக் கருப்பண்ணற்
நாட்டினில் விற்பனக் குளுவநானே

## சரணம்

மாரன் சமரிலரண் சூரன் வெகுதனகு
பேரன் மலர்மகள்கு மாரன் புகழுநெல்லை
யூரன் கொடையினிலு தாரன் சவுந்தரவ
சீரன் கருப்பணஒய் யாரன்கல் வாசநாட்டில் -
விற்பனக் குளுவநானே (i)

---

12. சமர் - போர்

மலர்மகள் - இலக்குமி;

சவுந்தரம் - அழகு

வசீரன் - விருப்பை ஏற்படுத்துபவன்

ஒய்யாரன் - ஆடம்பரமானவன்

மேகஞ் சிறந்துகுழல் பாகஞ் சரிந்துகன
தேகம் புசிந்துஅனு போகங் கசிந்துவெகு
மோகங் கொள்ளுமுன் நன்குவாகன் தமிழறிவி
போதன் கருப்பண்ணவை போகன்கல்
வாசநாட்டில் - விற்பனக் குளுவநானே (ii)

தேசம் புகழவரு போசன் புகழில்நள
ராசன் நெல்லையம்பதி வாசன் முக்கண்ணர்
நேசன் பதம்பணியும் நேசன் சூரியப்ர
காசன் கருப்பண்ணஉல் லாசன்கல்
வாசநாட்டில் - விற்பனக் குளுவநானே (iii)

மாயன் வரத்தில்வரு சேயன் சிறந்தவச்ர
காயன் கவிக்குதவு தாயன் அடுத்தவர்கள்
நேயன் மிகும்சதுரு பாயன் கதித்தசம்ப்ர
தாயன் கருப்பண்ணச காயன்கல் வாசநாட்டில் -
விற்பனக் குளுவநானே (iv)

---

குழல் - கூந்தல்
தேகம் - உடல்
புசித்தல் - அனுபவித்தல்.
அனுபோகம் - அனுபவப்படுவது
வாகன் - அழகன்
விபோதம் - அறிவு
வைபோகன் - அறிவுள்ளோன்

வச்ரகாயன் - உறுதிமிகு உடல்வளங் கொண்டோன்.
கவிக்கு - கவிஞர்க்கு
நேயன் - அன்புகொண்டோன்
சதுர் உபாயன் - அறிவு நுட்பமுள்ளவன்
கதித்த சம்பிரதாயன் - மிகுசாதுரியக்காரன்

# விருத்தம்

13. யிளங்குளிரம் புலிசூலி அரவம் பூண்ட
யிறைவர்திரு அகத்தீசர் யிணைத்தாள் போற்றி
வழங்குகறி பரியளாய்க் குடிதா னல்கி
வரதனைச்சேர்ந் திருக்குநெல்லை நகரில் நாளும்
களங்கமில்லாச் சிந்தையுள்ள முகிழ்திட் டாணி
கருப்பணர்தாள் தனைப்பணிந்து கனம் பெற்
றோங்கி
விளங்கிவளர்ந் திலங்கிய கல்வாசல் நாட்டில்
விற்பனசிற் றுள்ளதெல்லாம் விளம்பு வேனே

---

13. அம்புலி - சந்திரன்

சூலி - சூலாயுதம் உடையவன்

அரவம் - பாம்பு. "வெஞ்சின அரவம்" (மணி 104)

வழுங்குதல் - அசைதல் ; ஓலையில் வளங்குகரி என்றுளது.

கரி - யானை. "மழகளிறு கந்து சேர்பு . . .வழங்க" (புறநா.22)

பரி - குதிரை

முகிழ்திட்டாணி - மலர்ச்சியையுடைய திட்டாணி.

# கல்வாசல் நாட்டு மேன்மைகள்

## தரு

### பல்லவி

14. விற்பன(ச்) சிற்றறிவேன் அய்யே
விற்பன(ச்) சிற்றறிவேன்

### அனுபல்லவி

விற்பனச் சித்தறிவேன் தென்னெல் லையில்
மேவுந் திருவகத் தீசர் பதம்பணி
கற்பகத் தாரென வந்ததிட் டாணிக்
கருப்பண சாமிதன் கல்வாசல் நாட்டில் விற்பனச்
சித்தறிவேன்

---

14. பதம் - பாதம்

கற்பகத்தாரு - கற்பக மரம்

## சரணம்

அச்ச மில்லா நகராகிய நெல்லைக்
கதிபதி துய்ய மதிவதனப் பிரபு
கச்சணி கொங்கையர் மாரன் திட்டாணிக்
கருப்பண சுவாமிதன் கல்வாசல் நாட்டினில்
பச்சைப் பயறொன்றை நூறாகச் செய்யவும்
பாலெருமைக் கன்னில் பேரஞ் சொல்லவும்
வச்சிரத்தால் கொண்டு வந்ததை நாலுகால்
மாட்டுக்கும் வீட்டுக்கும் போட்டுக்
கொடுக்கவும் விற்பனச் சிற்றறிவேன் (i)

தேருடனேபரி வாரணம் சூழ்ந்திடும்
திட்டாணி அய்யர்க்குச் சட்டம் செலுத்திய
கார்நிற மேனிய நெல்லைத் திட்டாணிக்
கருப்பண சாமிதன் கல்வாசல் நாட்டினில்
சீரர வம்புலி மான்தரிப் பவர்க்கும்
தில்லையுந் தோளுமெல் கொள்வதிம் மூன்றையும்
ஊருடை யானென்று சொல்லிக்கலாம் புலவோர்க்குத்
தெரிந்து பின்னூ ரர்க்குந் தெரிந்திடும்"
- விற்பனச் சிற்றறிவேன் (ii)

---

துய்ய - தூய்மையான. "துய்ய தேவர்"
(கம்பரா. பிரமாத்திர.189)
வதனம் - உடல்
பயறொன்றை என மூல ஓலையிற் காணப்படுகிறது.
எருமைக்கன்னு - எருமைக்கன்று.
வச்சிரம் - ஓர் ஆயுதம்.
கார் - கருமை நிறம். "களங்கனியைக் காரெனச்
செய்தாரு மில்" (நாலடி 103)
புலி தரிப்பவர் - புலித்தோல் உடுப்பவர்; சிவன்.
புலிமுகன் என்னும் அசுரன் போர்க்குவர அவன்
தோலை யுரித்து அணிந்து வியாக்ராரி மூர்த்தி
யானார் என்ப.

அரிகர புத்திர னாகிய திட்டாணி
அய்யனார் வாசற் கதிகாரஞ் செய்திடும்
கருதலர்கள் கற்பும் மன்னன் திட்டாணிக்
கருப்பண்ண சாமிநாதன் கல்வாசல்
நாட்டினில்
சுருகை கடித்திடச் சூரிய வங்குசக்
கொற்றவற் கேநீச தத்துவம் வந்ததற்
கரிய திரிசங்கு சொர்க்க மதிலே
காட்சியா யிட்டதைக் கண்டறிந்து
நான்சொல்ல விற்பனச் சிற்றறிவேன் (iii)

---

அரிகரபுத்திரன் - மாசாத்தன், அய்யனார் என்று பெயர் கொண்டவர். விஷ்ணு மோகினியுருக் கொண்ட காலத்துச் சிவனுக்குப் பிறந்தவர்.

கருதலர் - பகைவர்.

சுருகை - சுரிகை - உடைவாள்.

திரிசங்கு சொர்க்கம் - திரிசங்கு என்பவன் தன் உடலுடன் சொர்க்கமடைய வசிட்டரை வேண்டினான். வசிட்டர் மறுக்கவே, விசுவாமித்திரர் அவனைச் சுவர்க்கம் அனுப்பினார். சுவர்க்க தேவர்கள் இவனைக் கீழே தள்ளுகையில் விசுவாமித்திரரால் காக்கப் பெற்று அந்தரத்தில் நின்றான் என்ப.

காள முகில்நிற மேனிய னீன்ற
கருப்பண சாமிதன் கல்வாசல் நாட்டினில்
வேளைகண் டானையெப் பூனைதின் றோடவும்
மேகத்தைத் தான்கருங் கோழி மறைக்கவும்
நாளையெண் ணாமலே பூனையை வண்டுகள்
நத்திப் பொசித்ததைச் சுத்தித் திரியவும்
ஏழு கடலை யெடுத்து விழுங்கிப்பின்
னெட்டுத் துவரைதின் றேப்ப மிடவும்நான்
- விற்பனச் சிற்றறிவேன்
- அய்யேநான் - விற்பனச் சிற்றறிவேன் (iv)

# சிங்கனின் திறம்

## விருத்தம்

15. குவலயத்தில் மிக்கதெய்வம் நீயே யென்று
குறித்துநெஞ்சில் துதிக்குமன் பர்க் குதவி யாக
கவலையின்றிப் பவுசுதருந் துரைதிட் டாணிக்
கருப்பரருள் சிறந்திடுங்கல் வாசல் நாட்டில்
அவனியெல்லாம் புகழ்குளுவன் பட்சி வேட்டை
யாடவும்சொற் படிகேட்கும் யேவ லாளாய்
மவுனசித்தர் தவசிருக்கும் பொதிகை வெற்பில்
மருவுகின்ற குறப்பயல்சிங் கனும்வந் தானே

---

காளமுகில் - கருமுகில்; காளம் - கருமை. "காளமா இருளை" (சீவக.2245)
நத்தி - விரும்பி

15. குவலயம் - உலகம்.
பவுசு - பெருமை
அவனி - உலகம்.

## தரு

### பல்லவி

16. சிங்கனும் நானே - புராதன(ச)
சிங்கனும் நானே

### அனுபல்லவி

தென்னெல்லை நகரில் திருஅகத்
தீச ரிருபதம் போற்றவும்
கங்கணங்கட் டிய துங்கன் திட்டாணிக்
கருப்பண்ண கல்வாசல் நாட்டினில் சிங்கனும் நானே

### சரணங்கள்

அற்புத மானதென் னெல்லையில் மேவுந்
திட்டாணிக் கருப்பண சுவாமிநன் னாட்டினில்
மற்புய நான்குளு வன்மனது வாய்க்க
நடந்து கொண்டே ஏழு வகையுடன்
செப்பும் படிவலைக் கண்ணி முழுதையுஞ்
சிமந்து வந்தானேன் றேவி கொடுத்திடும்
முப்பழங் கஞ்சியும் காடியுடன் சாப்பிட்டு
மோடியுடன் வேட்டையாடும் குறவநான் \
சிங்கனும் நானே (i)

---

16. புராதனம் - பழைமை
கங்கணம் - கையிலணியும் ஒருவகை வளையம்
துங்கன் - மேன்மையுடையோன். "அபிமான துங்கன் செல்வனைப்போல" (திவ்.திருப்பல்.11)
மற்புயம் - வலிமை மிழு தோள். மல் - வலிமை; புயம் - தோள் "புயம்பலவுடைய தென்னிலங்கையர்" (தேவா.130,8)
சிமந்து - சுமந்து
காடி - புளித்தநீர்
மோடியுடன்-திறமையுடன்

கஞ்ச மலர் திரு மேவிய நெல்லையில்
 கர்த்தன் திட்டாணிக் கருப்பர் நன் னாட்டில்
மிஞ்சிய வேட்டையில் ஆப்பிட்ட பஷ்சியை
 விந்தை திருமயஞ் சந்தையிலே வித்து
அஞ்சுக் கொருகா செடுத்துக் குளுவன்
 அறியாம லேகள்ள ரக்கையும் சாப்பிட்டு
வஞ்ச மில்லா நிசவா னிலுமெத்த
 வல்லா ளர்கள் அனவோர்களும் மெச்சிய -
 சிங்கனும் நானே (ii)

கன்னங் கரிமுகம் குந்தந் தவிக்கவே
 கர்த்தன் திட்டாணிக் கருப்பற்நன் னாட்டினில்
அன்னத்த வேதியை கைப்பத்தினான் பருந்தாந்தை
 தாராக்கள் பிடித்துக் கொண்டான் காக்கை
தன்னையுங் காரிக்கன் சுத்திக் கொண்டான்
 தாவும் மயிலை யெடுத்துக் கொண்டான்
யென்னத்தின் மேல்வேட்டை யேவக் குளுவனுக்
 கெல்லாம் பலன்களும் சொல்லிக்கொண்டேவரும்-
 சிங்கனும் நானே - புராதனச் சிங்கனும் நானே (iii)

---

ஆப்பிட்ட - அகப்பட்ட

அரக்கு - சாராயம்

அனவோர்களும் - அனைவரும்

காரிக்கன் - சலவை செய்யாத வெள்ளைத் துணி.

# திட்டாணிக் கருப்பர் நாட்டுப் பறவை மாட்சிகள்

## விருத்தம்

17. அந்தரதுந் துமிமுழங்கப் பரியிலேறி
அலங்காரப் பவனி சிறந்திலங்கு கோமான்
செந்திருவார்ப் புயனடியாற் கினிய கோமான்
திட்டாணிக் கருப்பரருள் செழிக்கும் நாட்டில்
வந்தசிங்கன் தனைக்குளுவன் கண்டுசிந் தைமகிழ்ந்து
பறவையின் வேட்டை பலன்கள் பேசி
சுந்தமலர் தடஞ்சூழும் நெல்லை யூரில்
கணத்திரளாய் பட்சிவரக் கண்டே னய்யே

## தரு

## பல்லவி

17. கண்டே னய்யே - பறவையைக்
கண்டே னய்யே

---

17. அந்தரதுந்துபி - ஒருவகைப் பறை
பவனி - உலாவருவதல்
கோமான் - தலைவன், அரசன்
சிந்தை - மனம். "சிந்தையாலும் சொல்லாலும்" (திவ்.திருவாய், 6,5,11)
கந்தமலர் - மணம் மிக்க மலர்
தடம் - வழி
கணத்திரள் - அடர்ந்த கூட்டம்.

## சரணம்

கண்டே னய்யே தென்னெல்லை மேவிய
　　கர்த்தன் திட்டாணிக் கருப்பண்ணர் நாட்டினில
அண்டங்கள் மொய்க்கும் பெரியகண் மாயினில்
　　அன்னமுந் தாராவும் வண்ணச் சிறவியும்
கொண்டல் படியும் புதுக்கண்மாய் தன்னிலே
　　கொக்குட னுள்ளானும் வக்காவுஞ் சீனியும்
வண்டாங்குடி கண்மாயி தன்னிலே வெள்ளை
　　மடையானும் மாடையும் மாடப்பி றாவுமாய்
　　　　- கண்டே னய்யே (i)

கார்கொண்ட மேகம் படிந்திதடுஞ் சோலை
　　கதிக்கும் திட்டாணிக் கருப்பண்ணர் நாட்டினில்
சீர்கொண் டிலங்கிய மஞ்சனிக்கண் மாயில்
　　செங்கால் நாரையும் பொங்கமாய்ச் சீளியும்
பேர்கொண் டுலாவிய கோயிலான்கண் மாயில்
　　பேரான மண்வெட்டித் தாராவும் அன்றிலும்
நீர்கண் டுலாவும்நீர்க் காகங்கள் சோடியாய்
　　நீளத் திரிந்திடுங் கூழக்கி டாவுமாய்
　　　　கண்டே னய்யே (ii)

---

17. அண்டம், அன்னம், தாரா, சிறவி - பறவை இனங்கள்
கொண்டல் - மேகம்
கொக்கு, உள்ளான், வக்கா, சீளி, வெள்ளை மடையான், மாடை, மாடப்புறா - பறவை இனங்கள்.
செங்கால் நாரை - சிவந்த காலையுடைய நாரை.
"நாராய் நாராய் செங்கால்
நாராய்" (சக்திமுற்றப்புலவர்)
பொங்கம் - பொலிவு. "பூடணமும் பொங்கமும்" (பணவிடு.365)
சீளி, மண்வெடித் தாரா, அன்றில், நீர்க்காகம் - பறவை வகைகள்.

கற்றவர்க் கேசொர்ண மாரி யெனத்தரும்
கய்யன் திட்டாணிக் கருப்பண்ணர் நாட்டினில்
மெத்தப் பெரிய நரசிங்கன் கண்மாயில்
மீன்கொத்தித் தூக்கத் தாழ்சிச் சிலிப்பானும்
யெத்திசை மெய்க்கும் யிளணாக்கண் மாய்தனில்
யெக்களிப் பாகிய முக்குளிப் பான்களும்
நித்தஞ் செழித்திடும் தாழக்கண் மாயினில்
நீர்கொண்ட மேகம்போல் ஆலாவூங் கூட்டத்தைக்
கண்டே னய்யே (iii)

கச்சணி கொங்கையைக் கண்டுமயல் கொள்ளும்
காமன் திட்டாணிக் கருப்பண்ணர் நாட்டினில்
உச்சித மாகிய உள்ளத்துக் கிணத்திலும்
உத்தமர் கூடி வாழும்கூ பத்திலும்
பட்ச மிகுந்த திட்டாணிக் குளத்திலும்
பார்வதியாளுவ காளுந்தர் மத்திலும்
சிச்சிலிப் பானுஞ் சகோரமும் ஆந்தையுடுஞ்
சேகர மாயிதோ கேகயப் பட்சியும்
கண்டே னய்யே (iv)

---

சொர்ணம் - பொன்.
மாரி - மழை
மீன்கொத்தி, சிச்சிலிப்பான் - பறவை இனங்கள்.
எக்களிப்பு - மிகுந்த மகிழ்ச்சி
முக்குளிப்பான் - ஒரு வகைப் பறவை
ஆலாபித்தல் - அலப்புதல்

மயல் - மயக்கம்
உச்சிதம் - அழகு, கூபம், கிணறு
பட்சம் - தரம்
சிச்சிலிப்பான், சகோரம், ஆந்தை, கேகயம் பறவைகள்.

## விருத்தம்

18. நீங்காத மலர்ப்பதத்தை நெஞ்சி னூடே
நிகழ்த்துமன்பர் யிங்கிருந்து நினைக்கும்போது
தாங்காமல் வந்தவர்க்கு மனத்திலுடை தருமர்
திட்டாணிக் கருப்பர் தமிழ்சேர் நாட்டில்
பாங்கான பெரியகண்மாய் கொடிக்கால் ஓடை
பருவாய்க்கால் ஊரணியன் வயல்கூட பங்கள்
மாங்காவும் மலர்த்தோப்பும் தோட்ட மெல்லாம்
வகைவகையாய்ப் பட்சியெல்லாம் வருகு தய்யே

## தரு

## பல்லவி

19. வருகு தய்யே - பட்சியெல்லாம்
வருகு தய்யே

## சரணங்கள்

தென்னெல்லைப் பதிவளர் மன்னன்
திட்டாணிக் கருப்பண்ணர் நாட்டினில்
உள்ளானும் பெருவயலில் அகத்தீசர்
முக்கணர்தண் ணும்பழத்தரு வைநேர்தாழ்ப்

---

18. ஊரணியன் - ஊருணிகள். "ஊருணி நீர்நிறைந் தற்றே" (குறள், 215)

தண் - குளிர்ச்சி. பழத்தரு - பழமரம்

தரு - மரம். "தருவனத்துள்" (கம்பரா. கையடைப் 10)

பள்ளத்தெக் கால்செயிசன் னதிசெய்து
மூன்றிலுந்தான் வெகுகுருகும் நாரையும்
அன்றிலுந் தாராவும் கோடான
கோடிகள் சோடு சோடாகவே - வருகுதய்யே (i)

தொட்டியம் பில்லிகள் சூனியம் யேவல்கள்
தொந்தரவாங் கட்டு மந்திர தந்திரம்
கட்டுக் கடங்காத துஷ்டன் திட்டாணிக்
கருப்பர்தன்னாட்டில் பெரிய மடைப்பாச்சல்
பட்டத்து வாய்க்காலில் வட்டப் பிராந்துகள்
பாதாள வாய்க்கால் திருமேனி வாய்க்காலில்
மட்டத்த முக்குளிப் பானுஞ் சிறவியும்
மாடப்பி றாக்களும் கோடான கோடியாய்
வருகுதய்யே (ii)

தஞ்சமென் றோர்களுக் கஞ்ச லென்றே
வரும்சாமி திட்டாணிக் கருப்பண்ணர் நாட்டினில்
மஞ்சனிக் கண்மாய் மடைப்பாய்ச்சல் வேளாவாய்க்
கால்செல்லி வாய்க்கால் மச்சு முறிச்சானில்

---

குருகு, நாரை, அன்றில், தாரா - பறவைகள்.
சோடுசோடாக - இரண்டு இரண்டாக.

தொட்டியம் - ஒரு வித்தை.
பில்லிசூனியம் - வித்தை வகை.
ஏவல் - பேயை ஏவுதல்.
வட்டப் பிராந்து - வானில் வட்டமிடும் பருந்து.
மட்டத்த - மட்டற்ற, அளவற்ற.

தஞ்சம் - அடைக்கலம்.
அஞ்சல் - அஞ்சற்க.
மஞ்சனிக் கண்மாய், மடைப்பாய்ச்சல், வேளா வாய்க்கால், மச்சுமுறிச்சான், வண்டாங்குடி வயல், நாவலடிச் செய், நாச்சியா வாய்க்கால், - திட்டாணிக் கருப்பர் நாட்டுநீர் நிலைகள்.

ரஞ்சித மாகிய வண்டாங் குடிவயல்
நாவலடிச் செய்யில் நாச்சியா வாய்க்காலில்
பஞ்சவர் ணக்கிள்ளை வெள்ளைப் பிறாவானம்
பாடிக் குருவியும் கோடிக் கதிகமாய்
வருகு தய்யே (iii)

வீறுசெய் வோற்கிடி யேறென வந்த
விசையன் திட்டாணிக் கருப்பண்ணர் நாட்டினில்
வரம்புகளும் யெள்ளு வயல்தனில் குஞ்சான்
வாய்க்கால் புரிகண் டன்வாய்க் காலில்
யேரும் பயிர்விளை தாழை வயலில்
யிலங்கும் அரசடி செய்வாகைச் செய்யினில்
தேருங் குருகினங் கூழைக்கி டாவுடன்
சிச்சிலிப் பான்களும் லெஷ்சோப லெஷ்சமாய்
வருகு தய்யே (iv)

---

கிள்ளை - கிளி. "கிள்ளை வளைவா யுகிரின்" (சீவக. 2439)
பஞ்சவர்ணக்கிளி, வெள்ளைப் புறா, பாடிக்குருவி- பறவைகள்.

வீறு - வெறுப்பு.
விசையன் - வாயிற்காப்போன்.
புரிகண்டன் வாய்க்கால், தாழை வயல்; அரசடி செய், வாகைச் செய் - வயல்களின் பெயர்கள்.
தேரும் - ஆராயும்.
குருகினம் என்பது ஓலையிற் குறுகினம் எனக்காணப்படுகிறது.
குருகு, சிச்சிலிப்பான் - பறவை வகைகள்.

# மீன்களைப் பறவைகள் தின்னும் காட்சிகள்

## விருத்தம்

20. தர்க்கமிடு வார்க்குமிண்டன் தன்குபேரன் சாமி
திட்டாணிக் கருப்பர் சதுர நாட்டில்
மைக்கிசைந்த பெரியகண்மாய் யிளணாக் கண்மாய்
மண்டபங்கோ புரங்கொடிக்கால் மதில்சூ பங்கள்
யிக்குயர்ந்த தோப்புவாய்க் கால்கள் மற்ற
யேரியூர ணிகள்மெத்த வீடு மாடம்
மிக்கதிரு வாசல்தண் ணீர்ப்பந்தல் தோறும்
வெகுதிரளாய்ப் பட்சிவந்து மேயு தய்யே

## தரு

## பல்லவி

21. மேயினு மய்யே பறவைகள்
மேயினு மய்யே

---

20. தர்க்கம் - சண்டை
மிண்டன் - திண்ணியன்
சதுர நாடு - நாகரிக நாடு
மை - நீர்.
இக்கு - கரும்பு
மாடம் - மண்டபம்

## சரணங்கள்

தென்னெல் லையில் மேவிய வேந்தன்
திட்டா ணிக்கருப் பர்தன் நாட்டினில்
தூய பெரியகண் மாயில் உழுவையைத்
தூக்கி விழுங்குநீர்க் காக்கை செழிக்குது
தாயக மானபுதுக் கண்மாய்க் கெண்டையை
தாக்கிச்சென் றேசொல்லி கொக்குகள் மொய்க்குது
ஞாயமோ மஞ்சணிக் கண்மாய் வரால்மீனை
நாரையெல் லாங்கூடி போராட்டஞ் செய்யுது
மேயினு மய்யே (i)

காலம் அறிந்தண்ணல் யிவனென்றே கொடிக்கட்டுந்
திட்டா ணிக்கருப் பண்ணர் நாட்டினில்
மேலுவண் டாங்குடி கண்மாயி மஷ்சங்களை
வெள்ளைச் சிறகியள் கொள்ளையிட் டுண்ணுது
யேலும் நரசிங்கன் கண்மாய் அயிரையை
யெக்களிப் பாய்தின்று முக்குளிப் பானெல்லாம்
சாலவும் கோயிலான் கண்மாயில் ஆராவை
தாராவும் அன்றிலும் யேராள மாகவே
மேயினு மய்யே (ii)

பார்த்தனுக் கோரத சாரதி யானவன்
பாலன் திட்டாணிக் கருப்பண்ணர் நாட்டினில்

---

உழுவை, கெண்டை, வரால் - மீன் வகைகள்.

மஷ்சம் - மச்சம் - மீன்
வெள்ளைச் சிறகி - பறவை வகை.
அயிரை - ஒருவகை மீன்
முக்குளிப்பான் - ஒரு பறவை.
ஆரா - ஒரு வகைமீன்
தாரா, அன்றில் - பறவை வகைகள்.

பார்த்தன் - கிருஷ்ணன்.
சாரதி - தேர்ப்பாகன். "சாரதி தொழுது சொன்னான்"

நாத்திசை மெச்சிய தாழைகண் மாயினில்
    நாரையெல் லாங்கூடி யெராலைப் பற்றுது
க்ஷேத்திர மானயிள நாக்கண் மாயினில்
    தேளியைக் கூழைக்கி டாப்பத்தி யோடுது
ஊத்துக் கிணத்தினில் பச்சிலைக் கெண்டையை
    உள்ளானெல் லாந்தின்று துள்ளாயங்
        கொண்டுதான்
        மேயினு மய்யே (iii)

மையிடுஞ் செல்வி சுந்தரமாய்ச் சேர்த்த
    மைந்தன் திட்டாணிக் கருப்பண்ண நாட்டினில்
அய்யனா ரும்பளம் வீரன்வாய்க் காலுக்
    கடுத்த பரளிச்செய் வேளான் செய்யிலும்
துய்ய கருங்காலி செய்யு முலகாயி
    சுந்தரி யூரணி திட்டாணி யூரணி
செய்யுங் கருப்பர் கிணத்திலுங் கெண்டையை
    சிச்சிலி யானெல்லாம் பட்சணம் பண்ணியே
            மேயினு மய்யே -பறவைகள்
            மேயினு மய்யே (iv)

---

யெரால் - இறால் - ஒரு வகை மீன் (கம்ப. இரா. வ. 10)
க்ஷேத்திரம் - ஸ்தலம்
தேளி - ஒருவகை மீன். ஓலையில் தேழி என்றுள்ளது.
கூழைக்கிடா - ஒரு வகைப் பறவை
பச்சிலைக் கெண்டை - ஒரு மீன்
உள்ளான் - ஒரு வகை மீன்

சுந்தரம் - அழகு
மைந்தன் - மகன்
உம்பளம் - கொடை; கொடையாக அளித்தது.
செய் - வயல். "செய்யிற் பொலம்பரப்பும் செய்வினை"
(பரிபா.10, 128)
கெண்டை - ஒரு வகை மீன்
சிச்சிலி - ஒரு வகைப் பறவை

## விருத்தம்

22. சுந்தரர்க்குத் தூதுசென்று ஊடல் தீர்த்து
துங்கர்திரு அகத்தீசர் துணைத்தாள் போற்றும்
கந்தபரி மளமணியுந் துரைதிட் டாணிக்
கருப்பரருள் பெருகியகல் வாசல் நாட்டில்
கொந்தலர்சோ லைபழனங் கொடிக்கா லோடை
குளங்கூபந் தன்னிலுஞ்சென் றிரைகள் மேய்ந்து
செந்தருவப் பஷிசியன்னம் கிளிக ளெல்லாங்
கிளைகூட்டி வருகுதடா கெம்பா ரய்யே

## தரு

## பல்லவி

23. கெம்பா ரய்யே - பொறுபொறு
கெம்பா ரய்யே

---

22. பரவை நாச்சியாரின் ஊடலைத் தணிப்பதற்காகச் சிவபெருமான் சுந்தரருக்காகச் சென்ற கதை ஈண்டு நினையத் தகும்.

கந்தம் - சந்தனக் குழம்பு

பரிமளம் - மிக்க மணம். "பரிமளம் கமழ்வன பாராய்" (கம்.சித்.25)

கொந்து - பூங்கொத்து. "கொந்தா ரிளவேனில்" (சிலப்.8,வெண்.1)

அலர் - மலர்ந்த பூ

பழனம் - வயல். "பழன மஞ்ஞை யுகுத்தபீலி" (புறநா. 13)

கெம்பாரய்யே - கெம்பாதே ஐயே என்பதன் மரூஉ மொழி. கெம்புதல் - உரத்துப்பேசுதல். ஐயே - விளிக்குறிப்பு.

## சரணம்

தென்னெல்லை நகர்க்குக் கிருபைக்கடல் கருப்பையர்
நாட்டினில் ... ... ...
அம்பாரம் மஞ்சனிக் கண்மாயில் மேய்ந்திட்ட
ஆலாவுஞ் சீளியும் நீலச்சி றகியும்
கும்பாரம் கோயிலான் கண்மாயில் மேய்ந்திட்ட
கூழக்கி டாக்காளும் நீலப்பி றாக்களும்
தெம்பாக ஓரேட்டுக் காகாசம் கொள்ளாமல்
திட்டாணி ஊரணி ஆல்வந்தி றங்கு கெம்பா
ரய்யே (i)

கன்னடர் மராடர் வந்துச லாஞ்செயுங்
கர்த்தன் திட்டாணிக் கருப்பண்ணர் நாட்டினில்
நன்னயஞ் சேருவண் டாங்குடிக் கண்மாயில்
நாகணப் புள்ளெல்லாம் சேகர மாகிய
தன்மைய தாக்நர சிங்கன் கண்மாயில்
தாராவெல் லாம்ஒரு கோரிக்கை யாகிய
தொன்னூற் பணிராமர் ராங்கியத் தேவர்தன்
தோப்புக்கொள் ளாமலே தாய்ப்பா யிறங்குது
கெம்பா ரய்யே (ii)

---

23. அம்பாரம் - கூட்டம்
மஞ்சனிக் கண்மாய் - ஒரு கண்மாயின் பெயர்
ஆலா, சீளி, நீலச்சிறகி - பறவைகளின் வகைகள்.
கும்பாரம் - அம்பாரம்.
கூழக்கிடா, நீலப்புறா - பறவைகள்

வண்டாங்குடிக் கண்மாய் - ஒரு கண்மாய்
நாகணப்புள் - ஒரு வகைப் பறவை. ஓலையில் நாகனப்புள் எனவுளது.
நரசிங்கன் கண்மாய் - ஒரு கண்மாயின் பெயர்
தாரா - ஒருவகைப் பறவை.
தொன்னூல் - பழைமை மிகு நூற்கள்.
தாய்ப்பாய் - முதன்மையாக

ஆசை மதனன் அழகுக் குபேரன்
 திட்டாணிக் கருப்பண்ண சாமிநன் னாட்டினில்
வாசம் புகழ்புதுக் கண்மாயில் மேய்ந்திட்ட
 மண்வெட்டித் தாராவும் மாரிக் குருவியும்
நேச மிகுந்த யிளணாக் கண்மாயில்
 நீர்க்காக்கை யுஞ்சில தூக்காணிப் பட்சியும்
தேசம் புகழும் கருப்பவே ளானுடன்
 தென்னமரச் சோலை தன்னி லடையுது
 கெம்பா ரய்யே (iii)

தண்டமிழ் கூறும் புலவர்க் கிரங்கும்
 தயாளன் திட்டாணிக் கருப்பர் நாட்டினில்
கொண்டல் குலாவிய தாழைக்கண் மாயினில்
 கொக்குவக் காவெல்லாம் யெக்களிப்
 பாய்ச்சேர்த்து
அண்டர் புகழும் மருதை யடிக்கிணத்
 தாலா வெல்லாம் வெகுகோலா-கலமாக

---

23. மண்வெட்டித் தாரா -தாரா எனும் பறவையினத்தில் ஒரு வகை.
மாரிக் குருவி - ஒரு வகைக் குருவி.
தூக்காணி - ஒரு வகைப் பறவை.

தண்டமிழ் - இனிய தமிழ்
இரங்கும் - பரிதாபப்படும். "சிற்றுயிர்க் கிரங்கிக் காய்சின
வாலமுண்டாய்" (திருவாச. 6, 50)
தயாளன் - கருணையுடையோன்
கொண்டல் - மேகம்
குலாவுதல் - சஞ்சரித்தல்
வக்கா - ஒரு வகைப் பறவை.
அண்டர் - பகைவர். "கால்வல் புரவி யண்ட ரோட்டி"
(பதிற்.88.9)

ஆலா - ஒரு வகைப் பறவை.

கண்டன் மூவாச்சி பழனியப்பேந்திரன்
கருப்பன் செய்தன்னில் விருப்பத் துடன்வர
கெம்பா ரய்யே பொறுபொறு
கெம்பா ரய்யே (iv)

## பலவிதப் பொறிகளை எடுத்துவரக் கூறுதல்

### விருத்தம்

24. பொருந்தா விருந்தோ டருந்திப் புராண
காவியம் படித்துப் பொழுதை நீக்கிச்
சிறந்து நெல்லை நகரு லாவுந்
திட்டாணிக் கருப்பரருள் சிறக்கும் நாட்டில்
பரிந்து கனவேட் டையினால் பஷ்சி
பிடிப்ப தற்கு யெங்கள் பதிக்குள்
யிருந்த வலைக்கண்ணி யெல்லாம் க்ஷணமே
போயிச் சென்று யெடுத்தா டய்யே

### தரு

### பல்லவி

25. யெடுத்துவா கண்ணியடா பறவை
அடுத்தினி மேயுதடா

---

கண்டன் செய், மூவாச்சிச் செய், பழனியப்பேந்திரன் செய்,
கருப்பன் செய் - வயல்களின் பெயர்கள்.

24. கண்ணி, கன்னி என ஓலையில் எழுதப்பெற்றுள்ளது.

## சரணம்

யெடுத்தவர் கண்ணி பிடித்திடும் வாணர்க்
கிரங்கிச் சகல வரங்களும் நல்கிய
அடுத்தவர் தங்களைக் காப்பாற்றுந் தெய்வம்
திட்டாணிக் கருப்பண சாமிநன் னாட்டினில்
நடுத்தெரி யாம லிருக்கும் வலையையும்
தாரா வலையையும் கவுதாரி வலையையும்
தடுத்துப் பிடிக்கின்ற வெள்ளைப் பிறாவலை
தன்னையும் நீயிப்போ யின்னேரமே தான்சென்று
யெடுத்துவா (i)

தோளைக்கொண் டேகயி லாசத்தை(த்) தாங்கிய
சூரன் யிராவணன் போரில் தயங்கிட
நாளைக்கி வாவென்று அனுப்பிய சீதரன்
- நல்குந் திட்டாணிக் கருப்பண்ணர் நாட்டினில்

---

பிறா - புறா

தோளால் கைலாசம் தாங்கியது: நந்திதேவர் கூறவும் மறுத்த இராவணன் கைலைமலையை எடுத்தெறிய முயன்றான். அதுகண்டு சிவன் தன் கால் விரலால் மலையை அழுத்த இராவணன் மலையடியில் அகப்பட்டனன் என்ப.

நாளைவாவெனல்: முதல்நாள் போரில் இராவணன் தோற்கவும் நாளைவா என்றான் இராமன். "நாளை வாவென நல்கினன் நாகிளங் கமுகின் வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்"

(கம்ப.யுத்த.8066)

சீதரன் - இராமன்.
முக்குளிப்பான் - ஒருவகைப் பறவை.

தாழுப்ப றந்திடும் முக்குளிப் பான்வலை
சாதகப் பட்சியைப் பேதகஞ்செய் யும்வலை
கூழக்கி டாவலை நத்தைதிண் ணிவெள்ளைக்
கொக்கு வலையெல்லாம் பக்குவ மாகவே-
யெடுத்துவா (ii)

தேசத்தை யார்ப்பரி பூரணி புஷ்கலை
தேவி மனோகரன் திட்டாணி அய்யனார்
வாசல் பிரதானி மதிமந்திரி யெனவந்த
திட்டா ணிக்கருப் பண்ணர் நாட்டினில்
ஆசைக்கி னியகவுதா ரிக்கட்டு பேரண்டச்
சுருக்குப் பிறாத்தட்டு போடும் போது
தோசப்ப டாமல் சுருட்டிக்கொண் டேவரும்
உள்ளான் வலையையும் வெள்ளெனப்
போயிப்போ யெடுத்துவா (iii)

வட்டிக் கிசையுந் தனத்தியர் மோகிக்கும்
மாரன் திட்டாணிக் கருப்பண்ணர் நாட்டினில்
தெட்டிப் பறிக்கின்ற வேசைக்கி மால்கொண்டு
தேடிப் புதைத்த பணத்தை முழுவதும்

---

சாதகம் - வானம்பாடி
பேதகம் செய்தல் - பிரித்தல்.

பூரணை, புட்கலை - அய்யனார் மனைவிகளின் பெயர்கள்.
பிரதானி - அதிகாரி
கவுதாரிக்கட்டு, பேரண்டச் சுருக்கு, புறாத்தட்டு பறவைகள் - பிடிக்கும் பொறிகள்.

வட்டு - சூதாடு கருவி. இது தனத்துக்கு உவமையாயிற்று.
இசையும் - ஏக்கும். "இன்னவைபிறவு மிசைவில வெல்லாம்" (பெருங்.மகத.15, 9)
தெட்டல் - அபகரித்தல்

கொட்டிக் கொடுக்கின்ற பேயரைப் போலவே
கோகில முங்கிளிக் கூட்டமும் நான்செய்த
ஒட்டுக்கு ளாப்பிடுஞ் சிட்டொக்க கண்ணியள்
உள்ளதெல் லாத்தையும் தெள்ளிமை
யாய்ச்சென்று யெடுத்துவா கண்ணியடா
பறவை அடுத்தினி மேயுதடா (iv)

## விருத்தம்

26. கயிறுகளைத் திருடினதால் யிடைப்பெண் ணார்கள்
தாம்புகொண்டு கட்டவும்பே ரொருபூ தப்பெண்
உயிருடனே முலைப்பாலுங் குடிக்கும் மாயோன்
உதவுதிட்டா ணிக்கருப்பர் உ(தி)த்த நாட்டில்
யெயிறுகொண்டு முப்புரத்தின் மதிலுஞ் சாய்த்த
யிறைவதிரு வகத்தீசர் யிணைதாள் போற்றி
பயிருகொண்ட வயல்தோப்புக் குள்ளே யெல்லாம்
பரிவாகக் கண்ணிகளைப் பதிப்பா ரய்யே

---

கோகிலம் – குயில்
ஒட்டு – கண்ணி
ஆப்பிடும் – அகப்படும்.

26. பூதப்பெண்ணின் உயிர் குடித்தது: பூதனை எனும் அரக்கி கம்சன் ஏவலால் கோகுலத்தில் இருந்த கண்ணனுக்கு விடமுள்ள முலைப்பாலூட்டிக் கொல்ல முயலுகையில் கண்ணனால் முலைவழியாக உயிருண்ணப்பெற்றாள் என்ப.
எயிறு கொண்டு – எயிற்போர் செய்து.
எயிற்போர் – கோட்டை மதிற்போர்.

## தரு

## ராகம்

தானா தத்தனந் தனத்தனா - தன
தானா தத்தனந் தனத்தனா

## கண்ணிகள்

27. பைந்தமிழ் சேர்நெல்லைப் பதியினார்க் - குயிர்
பாங்காய்க் கருப்பர்நன் னீதியினால்
ஐந்தரு கல்வாசல் நாட்டிலே - வேட்டை
யாடாவா டாவயர் காட்டிலே (i)

திட்டாணி அய்யரைப் போற்றடா - நல்ல
செல்வக் கருப்பரை வாழ்த்தடா
நிஷ்டையாய் நாட்டாரைப் பணியடா திரு -
நீறையும் நெற்றியி லணியடா (ii)

வாரமும் சந்திரன் உதையமாம் - நாசி
வலத்தில் சூரிய னுதையமாம்
நேரே கெருடனும் யிடமடா - நாமள்
நேமித்த வேட்டையுந் திடமடா (iii)

---

(i) ஐந்தரு - ஐந்து மரங்கள் உள்ளன. அவை அரச்சந்தனம், கற்பகதரு, சந்தானம், பாரிசாதம், மந்தாரம் என்பன.

(ii) நிஷ்டை - உறுதி

(iii) வாரம் - கடல்
உதையமாம் என்பது ஓலையிற் சதையமாம் என உளது.
நாமள் - நாம்.

தாவும் பெரிய வயலிலே – சிவன்
சன்னதிச் செய்யுக்குள் கரையிலே
மேவிய நாரையும் நூறடா – அதில்
மீன்கொத்தி யும்தொண்ணூறத் தாறடா (iv)

தப்பவி டாதேஉன் கருத்தடா – அது
தனக்குக் கண்ணியைத் திருத்தடா
ஒப்புட னேகரை யடுத்தடா – சிட்டுக்
கொன்பது கண்ணியைத் திருத்தடா (v)

அய்யனார் வீரன் வயல்களில் – விளை
யாடுது பார்கருங் குயில்கள்தான்
பய்யப்யோய்ச் செய்யுக்குள் குதியடா – அது
படுக்கைக் கண்ணியைப் பதியடா (vi)

செம்பியான் வாய்க்கால் வரப்பிலும்
திருமேனிவாய்க் கால்தனில் பரப்பிலும்
கம்பளி நாரைகள் சுதையடா – அதுக்
கான வலைதனைப் பதியடா (vii)

---

(iv) மேவிய – சேர்ந்த. "மேகநாதன் புகுந்திலங்கை மேயநாள்"
(கம்பரா. திருவவ. 10)

(v) சிட்டு – பறவை வகை.

(vi) படுக்கைக் கண்ணி – ஒரு வகைப் பொறி

(vii) கம்பளி நாரை – ஒரு வகைப் பறவை.

வண்டாங்குடிக் கண்மாய்க் கரையிலே - கன
　　மாடப்பி றாஒரு நிரையிலே
ரெண்டாயி ரத்துக்கண் டிருக்குது - வந்து
　　தேருடக் கண்ணியைப் பொருத்தடா (viii)

நாச்சியார் வாய்க்கால் தெளியிலும் - அந்த
　　நவ்வ வடிச்செய்யில் புளியிலும்
ஊர்ச்சிட்டுக் காக்கையுஞ் சுதையடா - அதற்
　　குள்ள வலைகளைப் பதியடா (ix)

அற்சனார் பாகஞ்செய் முடுக்கிலும் - நல்ல
　　ஆத்திப் பட்டிவயல் வடக்கிலும்
சிச்சிலிப் பான்களும் கூட்டமா - மது
　　செறுக்குங் கண்ணியை நாட்டடா (x)

மாதக னாச்சி உம்பளம் - செய்யில்
　　மாடப் பிறாநெல் விளைச்சலில்
சாதக மாய்விளை யாடுது - அதில்
　　தப்பாமல் கண்ணியைப் போடடா (xi)

---

(viii) நிரை - ஒழுங்கு
தேருடக்-கண்ணி - பறவை பிடிக்கும் பொறி.

(ix) வாய்க்கால் தெளி - வாய்க்காலில் ஓடும் தெளிவான நீர்.
புளி - புளிய மரம்.

(x) அற்சனார் - அருச்சனை செய்வோர்
பாகம் - சமையல்
செறுக்கும் - கொல்லும், தாக்கும் என்னுமாம்.

(xi) மாடப்பிறா - மாடப்புறா - ஒரு வகைப் புறா

வேளான் செயிக்கி மேற்கிலே - அந்த
மெய்க்கருங் காலிச்செய் தாக்கிலே
சூழக்கி டாவெல்லாங் கூட்டமாம் - அதைக்
கொண்டு வரக்கண்ணி மாட்டடா (xii)

மஞ்சனிக் கண்மாயிக் கரையிலும் - அந்த
மச்சமுறிச் சான்செயி ஆலிலும்
அஞ்சுகந் தான்வெகு திடமடா - அதற்
காலம்பால் கண்ணியில் தடவடா (xiii)

வீரவே ளான்செல்லி வயல்களில் - அந்த
வேளார் வயல்களின் கழுவினில்
மாரிக் குருவிகள் நெருக்கமாம் - பரி
வாம்மயிர்க் கண்ணியைத் தாக்கடா (xiv)

கோயிலான் கண்மாயி வயல்களில் - வெள்ளைக்
கொக்கிருந் தேவிழி துயிலுது
பாயும் படிக்கி முக்கூட்டா - யிருபத்
தெட்டுக் கண்ணியும் போடடா (xv)

செட்டிக் கண்மாய்வயல் வரப்பெல்லாம் - பெருஞ்
செங்கால் நாரைகள் விருப்பமாம்
கட்டிப்பி டித்துக்கொண் டிருக்குது - அதுக்
கான வலைதனைப் பெருக்கடா (xvi)

---

(xii) தாக்கு - அடிப்பகுதி
(xiii) ஆலம்பால் - ஆலமரத்தின் பால்
(xiv) கழு - அடர்ந்த புல்வெளி. மயிர்க்கண்ணி என்பது ஓலையில் பயிர்க்கண்ணி எனக்காணப்படுகிறது.
(xv) விழிதுயிலுது - தூங்குகிறது.
(xvi) வரப்பு - வயலின் எல்லை.

துய்ய நரசிங்கன் குளத்திலும் - வயல்
சுந்தர வேப்பஞ்செய் பள்ளத்திலும்
செய்யசெம் போத்துக்கள் வருதடா - அதைச்
சேர்க்கும் படிக்கண்ணி பொருத்தடா (xvii)

மத்தோர் செய்மடைக் கடைவிலும் - கரு
மாணிக்கப் பெருமாள் நடவிலும்
மெத்தவே ஆந்தைகள் கூட்டமாம் - வந்து
மேவவே கண்ணியை நாட்டடா (xviii)

யிளணாக் குளத்தா மரையிலும் - அதற்
கிசைந்த கல்லஞ்செய்க் கரையிலும்
வளமாய்ச் சிறகுகள் சுனமடா - ஓட்டி
வாரது தெய்வயெத் தனமடா (xix)

குஞ்சான் வயல்களின் நாத்திலும் - குளக்
கண்டன் வயல்(களின்) சேத்திலும்
பஞ்ச வர்ணக்கிளி கூட்டமாம் - வந்து
படுக்கக் கண்ணியை(ப்) பூட்டடா (xx)

---

(xvii) செம்போத்து - செம்புகம் எனும் பறவை.

(xviii) மத்தோர் - மற்றோர்.
மடை - நீரணை.
நடவு - நாற்று நட்ட வயல்

(xix) வாரது - வருவது
எத்தனம் - முயற்சி

(xx) நாத்து - நாற்று
சேத்தில் - சேற்றில்
பூட்டுதல் - பொருத்துதல். "களிறு பலபூட்டி" (பதிற். 44,16)

தாழ்வயல் சுந்திர வயல்களில் - வெகு
தாக்கு வாகனச்செய் பயிரிலும்
ஆள்காட்டிப் பஷிகள் பெருக்கமாம் - அதுக்
கான வலைதனைச் சுருக்கடா (xxi)

ஊத்துக் கிணத்தில் பூவிலுங் - கரை
யுற்றதென் னஞ்சோலைக் காவிலும்
காத்துக்கொண் டன்னங்க ளிருக்குது - அதற்
கான வலைதனை நெருக்கடா (xxii)

அம்பல உம்பளக் கருப்பவே - ளான்
கானவே ளான்செயி வரப்பிலும்
யிம்பமாய்க் கொல்லன்செய் பரப்பிலும் - குடி
யிருப்ப டாசுத்த வெள்ளைப்புறா (xxiii)

சின்னம்பலம் சின்ன வேளானி - பூப்பைச்
செயிக்கு ளேநடு மய்யத்திலும்
சின்னவேளா னும்பளங் குசவன் - தலைச்
சேர்க்கையி லேவெகு யேற்கையுடன் (xxiv)

சக்கிர வாளப்புள் ளிருக்குது - கொக்கு
தானும் மீனைத்தின் று பெருக்குது
தொக்குட னேஅதைப் பிடிக்கவே - வலை
சுத்திப்போம் ருக்கண்ணி யடுக்கடா (xxv)

---

(xxi) தாழ்வயல் - பள்ளமான வயல்

(xxiii) அம்பல உம்பளம், கருப்பவேளான் செய், கொல்லன்செய், கானவேளான் செய் - வயல்களின் பெயர்கள்.

(xxiv) சின்னவேளான் இலுப்பைச் செய், சின்னவேளான் உம்பளம், குசவன் தலைச்சேர்க்கை வயற்பெயர்கள்.
தலைச்சேர்க்கை, மூலத்தில் தளைச்சேர்க்கை எனக் காணப்படுகிறது.

(xxv) தொக்கு - அற்பம்

மருதடிக் கிணக்க ரையிலும் - அந்த
மண்ணுக்கு ளச்செயிக் கரையிலும்
பெருமாள் வாய்க்காலுக் கருகிலும் - அதின்
பின்க ரும்பங்கின் மருதிலும் (xxvi)

நம்பி யான்செயிச் சம்பாவிலும் - அந்த
ராமவே ளான்தோப்பு மறவிலும்
அம்பா ளுலகாயிக் குளத்திலும் - திட்
டாணிக்க ரையாலினும் பளத்திலும் (xxvii)

கொடிக்கால் வடவனத் தழையிலும் - அந்தக்
கொத்துக் கணக்கன்செய் முளையிலும்
தொடுக்கும் தேவன்வாய்க் காலிலும் - செலஞ்
சூழ்குளங் கோர்வைச்செய் வேலிலும் (xxviii)

வந்திடும் வேப்பஞ்செய் வரப்பிலும் - அந்த
வட்டப்பி ராந்தன்செய் விறைப்பிலும்
சுந்திர திட்டாணிக் குளத்திலும் - பல
தொழிலா ளிகளும் பளத்திலும் (xxix)

---

(xxvi) மருதடிக்கிணக்கரை - ஒரு கிணற்றங்கரையின் பெயர்.
மண்ணுக்குளச்செய் - வயலின் பெயர்
பெருமாள் வாய்க்கால் - வாய்க்கால் ஒன்றின் பெயர்
பங்கு - கூட்டு

(xxvii) நம்பியான் செய் - ஒரு வயலின் பெயர்.
இராமவேளான் தோப்பு - தோப்பினது பெயர்.
உலகாயிக் குளம் - குளத்தின் பெயர்.

(xxviii) கொடிக்கால் - வெற்றிலைக் கொடி, . தழை - இலை
கொத்துக்கணக்கன் செய் - வயற் பெயர்
முளை - மூங்கில்
வேல் - வேலமரம், மூங்கில் எனினும் ஒக்கும்

(xxix) தொழிலாளிகள் உம்பளம் - தொழிலாளிகளுக்கென விட்டுத்தந்த கொடைநிலம்

துய்ய பவளக்கால் நாரையுஞ் - செடி
சுத்தி வரும்கவு தாரியும்
அய்யமில் லாமலே வருதடா - அதற்
கானதோர் கண்ணியைப் பொருத்தடா (xxx)

## தானா தத்தனந் தனத்தனா

## விருத்தம்

28. பரியைநரி யாக்கிவிட்டுத் துவாத சாந்தப்
பதியிலொரு வேதியனை மணஞ்சோ தித்த
அரியதொரு அகத்தீசர் துணைத்தாள் போற்றி
அன்பதிட்டா ணிக்கருப்பர் அருள்சேர் நாட்டில்
பெரியவயல் பழனங் கொடிக்கா லோடை
பெருவாய்க்கால் நிறைதோப்புக் கிணங்கள்
தோறும்
பரிவுடனே பதித்தகண்ணி வலைபோட் டெல்லாம்
பட்சிபல சிக்கினதைப் பார்ப்பாய் சிங்கா

---

28. பரியை நரியாக்குதல்: சிவமூர்த்தி சிவகணங்களைக் குதிரை வீரர்களாகளாகவும், நரிகளைக் குதிரை களாகவும் மாற்றி மணிவாசகர் மூலமாகப் பாண்டியனிடம் சேர்ப்பித்தனர். பின்பு, அன்றிரவே குதிரைகள் எல்லாம் நரிகளாய் மாறி முன்னிருந்த குதிரைகளைக் கடித்துவிட்டுச் சென்றன என்ப.

துவாதசாந்தப்பதி - மதுரை

# இட்ட கண்ணிகளில் பட்ட பறவைகள்

## தரு

### பல்லவி

29. பட்சிகள் சிக்குச்சய்யே - கண்ணிக்குள்ளே
பட்சிகள் சிக்குச்சய்யே

### சரணம்

பட்சிகள் சிக்குச் சய்யே நெல்லையூர்ப்
பாங்கன் திட்டாணிக் கருப்பண்ணர் நாட்டினில்
உச்சிதத் தோப்புவயல் கண்மாய்க் கூபத்தில்
ஊணிப் பதித்த வலைக்கண்ணி ஓட்டினில்
மெச்சிய ஆலாச் சிறகி மணிப்பிறா
மீன்கொத்தி நீர்க் காக்கை நாகணவாய்ப்
புள்ளும்
மஷ்சம் முழுங்கிய கூழக்கி டாவுடன்
வக்காவுங் கொக்குமாய் முக்கூட்டி லேவந்து -
பட்சிகள் சிக்குச்சய்யே (i)

---

(i) ஊணிப் பதித்த - ஊன்றிப் பதித்த
மணிப்பிறா - புறா வகைகளில் ஒன்று
மஷ்சம் - மீன்
முழுங்கிய - விழுங்கிய
வக்கா - பறவைகளிலொன்று

சோனையுங் காத்து துரோபதை மாதின்
　　துயிலையுங் காத்து மடுவில் விழுந்திடும்
ஆனையுங் காத்த துவாரகை மாயன்
　　அருளுந் திட்டாணிக் கருப்பண்ணர் நாட்டினில்
வானில் பறக்கும் வலியானுங் காடையும்
　　மஞ்சக் கழுகும் மரக்கொத்திப் பட்சியும்
கானுக்குள் வாழும் கவுதாரிப் பேடும்நீர்க்
　　காக்கையுங் கண்ணிக்குள் சிக்கிக்கீக் கீயென்று -
　　　　பட்சிகள் சிக்குச்சய்யே (ii)

---

(ii) சோனை - விடாமழை.
இந்திரன் பசுக்களை வருத்த விடாமழை பெய்விக்கக் கண்ணன் கோவர்த்தன மலையைப் பிடித்துக் காத்தான் என்ப.

ஆனைகாத்து: முதலையிடம் அகப்பட்ட யானை ஆதி மூலமே எனக் கதறுகையில் அந்த யானையைக் காத்தான் கண்ணன் என்பர்.

துவாரகை மாயன் - கண்ணன்

வலியான், மஞ்சள் கழுகு - பறவைகள்

கான் - காடு

பற்குண ராசன் பதிமூன்றா நாளையில்
படையில் படாம லிருக்கக்-கதிரோனைக்
கரத்தாலே மறைத்திடு மாலின் தனையன்
திட்டா ணிக்கருப் பண்ணர் நாட்டினில்
முக்குளிப் பான்நறை யான்தவிட் டுப்பிறா
மூக்குச் சிவந்த செங்கால் நாரையும்
பொட்டைக் கொக்குடனே வெள்ளை மடையானும்
முக்கூட்டுக் குள்வந்து பூட்டக மாகவே -
பஷ்சிகள் சிக்குச்செய்யே (iii)

---

(iii) கதிரோனைக் கரத்தால் மறைத்தது: பாரதப் போரில் பதிமூன்றாம் நாளில் அருச்சுனன் தன் மகன் அபிமன்யுவைக் கொன்றவனைச் சயத்திரன் சூரியன் மறையுமுன் கொல்வேன் என்ச் சபதம் செய்யவே, அதற்கொப்பக் கண்ணன் ஆதவனைத் தன் கையாலே மறைத்தனன் என்ப.

பொட்டைக் கொக்கு - கொக்கின் பெண்ணினம்.

பூட்டகமாக - எளிமையாக

பன்றிக் குழந்தைக்கிப் பால்கொடுத் தபரன்
பத்தனு மாகி விறகுஞ் சிமந்திட்ட
நன்றாய்த் திருவகத் தீசர் பதம்பணி
நண்பர் திட்டாணிக் கருப்பண்ணர் நாட்டினில்
அன்றில் குருவியும் வெள்ளை மடையானும்
ஆந்தையுஞ் சீளியும் பேரண்ட பஷ்சியும்
யென்றைக்கும் யெட்டாத கொண்டலா திகளும்
யிச்சை மயில்களும் லஷ்சோப லெஷ்சமாய் -
பஷ்சிகள் சிக்குச்சய்யே - கண்ணிக்குள்
பஷ்சிகள் சிக்குச்சய்யே. (iv)

## விருத்தம்

30. கைச்சரம் புனைதிட் டாணிக்
கருப்பண்ண சாமி நாட்டில்
வச்சதோர் கண்ணி எட்டில்
வந்திடும் பறவை யெல்லாம்
அச்சமில் லாமல் வாரி
ஆய்ந்தொரு மலைபோல் சேர்த்து
பஷ்சிகள் தனையன் சொல்லின்
படிசில வழிப்பாய் சிங்கா

---

(iv) தாயிழந்த பன்றிகளுக்கு இறைவனே பன்றியாக வந்து பால் கொடுத்தது திருவிளையாடற் புராணத்தில் 45 - ஆம் திருவிளையாடலாக வரும்.

இசைவல்ல பாணபத்திரருக்காக, ஏமநாத பாகவதரை ஓட்டுவதற்காக இறைவன் விறகு விற்போனாக வந்து திருவிளையாடல் புரிந்தமை 41 - ஆம் திருவிளை யாடலாகக் கூறப்பெறும்.

அன்றில் - ஒரு குருவி
கொண்டல் - பறவை வகை
இச்சை - ஆசை

30. கைச்சரம் - சிறிய மணிவடம்.
வச்ச - வைத்த, சிலவழித்தல் - செலவு செய்தல்

## தரு

31. செய்யதிரு வகத்தீசர் தனைப்பணி முன்னே - அவர்
செல்வராங்கற் பகப்பிள்ளை யாரைப்பணி
சொன்னேன்
அய்யனார் திட்டாணிஆண் டவனைத்தொழு தேற்று -
திட்டாணிக்
கருப்ப ரிருபதந் தன்னையும் போற்று (1)

நன்னயமாய் அன்னபட்சியை நோக்காம லெடுடா -
பிரமன்
நாயகிக்கா தியவாகனங் கொண்டுபோய்க்
கொடடா
வின்னம்வா றாமல்மயில் பதியையெடு முன்னே -
குன்றை
வேலவற்கா கியவாகனந்தான்கொடு
சொன்னேன். (2)

அய்யர் திட்டாணிக் கருப்பருக்குக் கவுதாரி -
தானுஞ்
சூட்டாங் கறிக்காகும் கொண்டுபோ வாரி
வையம்புகழ் பரிவார தெய்வங்களுக் கய்யே - நூறு
மாடப்பிறா ஆயிரங் காடைகொண்டு வையே (3)

---

1. தொழுது - வணங்கி

2. பிரமன் நாயகி - சரசுவதி
வாகனம் - அன்னப் பறவை
வேலவன் - முருகன்
முருகன் வாகனம் - மயில்.

3. சூட்டாங் கறி - சுட்ட இறைச்சி

முன்னோடித் தெய்வம் சகலத்துக்கும் வேணும் - நாறு
முட்டைச்சி றகிஅவித்துப் படைத்திடுங் காணும்
மின்னூரு நெல்லைத் தெய்வத்துக் கய்யே - அவர்
வேண்டிய பஷ்சிகளைக் கொண்டுபோய் வையே (4)

தாஷ்டிகனாம் ராமராங்கியத் தேவரும் மேரு - அவர்
தன்கையில் வைத்திருக்கக் கிள்ளையைச் சேரு
நாட்டுத்துரை மாகாளித் தேவருக் கய்யே - மெத்த
ரஞ்சித மாயொரு கிஞ்சுகம் வையே (5)

மாநகரா கியநெல்லைத் திருவகத் தீசர் - தன்னை
மருவுபெரி யவன்தனையும் அர்ச்சிக்கும் நேசர்
நானிலம்பு கழ்மாமறை யோரன்ன தாரு - வடுக
நாதக்குருக்கள் தனக்கொரு கிள்ளையைச் சேரு (6)

---

4. முன்னோடித் தெய்வம் - ஊர்வலம் முதலியவற்றில் முன்செல்லும் தெய்வம்
மின்னூரு - முன் ஊர்கின்ற.
ஓலையில் மின்னூறு என்று காணப்படுகிறது.

5. மேரு - பொன்மலை.
பொன் போன்ற இராமராங்கியத்தேவர் என்பது ஈண்டுக் கருத்து.
ரஞ்சிதம் - அன்பு
கிஞ்சுகம் - கிளி

6. நானிலம் - உலகு
தாரு - தேவதாரு
கிள்ளை - கிளி. கிள்ளை வளைவா யுகிரின் (சீவக. 2439)

ஊருக்கிசைந்த மணியம் அண் ணாப்பிள்ளை
திடவான் அந்த -
உத்தமனுக் கொருசுத்த வெள்ளைக்கிளி குடடா
வீரியவான் மயிலேறும் பெருமாள் சம்பிரதி - அவன்
வீட்டுக்குத் தாராவில் ஆறுகொடு மெத்த (7)

பிருதிபோன் று மூவுக்கொருபுகழ் யிளணாப்பட்டி
- யோகன் நல்ல
புண்ணியவான் கல்விதன்னை யறிந்தவிபேகன்
மன்னன் வயிரவன் சின்னண்ணஞ் சேரு - பத்து
மாடப்பிறா வைக்கொடுத்தை யென் றால்வெகு
சீரு (8)

சேர்வைகண்டி ரெகுநாத வேள்சுத்த வீரன் அந்த
செப்புள்ளான் சின்னண்ணன் தான்மிகுந்த
உதாரன்
ஊழியக்கா ரன் அழகப் பன்சேர்வா கனவான்
ரெண்டு
கூழைக்கி டாவைக் குடுத்துவா சோமன் (9)

---

7. வீரியவான் - வீரமுடையான்
சம்பிரதி - முதன்மை எழுத்துக்கணக்கன்

8. பிருதி - கூலி
உழவு என்பது உலவு என மூலத்திற் காணப்படும்.
சீர் - அழகு "சீர்கெழு சிறப்பின்" (மலைபடு. 570)

9. உதாரன் - கொடையாளி

தருவான்வித் தகமுத்துக் கருப்பணஞ்சேர்
வைக்கனவான் - நூறு
வெள்ளைச்சிறகு கொடுத்துவா டாசொர்ணம்
தருவான்
சத்தியநான் களங்காப்புலி சேர்வைதான்
பெறுவான் -அவன்
வீட்டுக்குப் பத்துப்பிறா கொடுலேஞ்சு
தருவான் (10)

மன்னன்கருத் தப்பழனியப் பேந்திரன் தாரு
- அவன்
மைந்தன்சின் னக்கருப்பேந் திரன்சொர்ண மேரு
நன்னயமாய்ப் பத்துநாரை யுடன்கவு தாரி - வீடு
தான்கொடுத்துதால் துப்பட்டாத் தருவான்கன
பாரி (11)

பூசாரிஅம் பலம்வேளாக் கள்தான்கன பேரு
- யிந்தப்
புறாவில் அறுநூறு கொண்டுபோய்ச் சேரு
வாசனைசேர் நெல்லையூர் மரங்கள் வீடு - நூறு
மண்வெட்டித் தாராவைத் தூக்கிக்கொண்
டோடு (12)

---

10. வித்தகன் - பொருள் கொடுப்போன்
சொர்ணம் - பொன்
சத்தியவான் - மெய்யன்
லேஞ்சு - தலைப்பாகைத் துணி

11. துப்பட்டா - ஒரு சேலை
பாரி - பெரியோன்

திட்டானிஅய் யர்பாதத்தை நித்தமோம் புதலார்
- உயர்
சிகரத்திலே தீபம்நக ரக்குடிகன் முதலாற்
சோழன்பெரிய நன்னாட்டுக் கோவன்வங்கிஷ
தீரன் - புகழ்
துய்யசினந் தான்அடைக்கக் கோன்செல்வ
குபேரன் (13)

வேலன் வந்த பையூரில் வயிரக்கோன் பாலன்
- (அந்த)
வீரப்பனாங் கருப்பக் கோனந்தன் சீலன்
தெள்ளிமையா யிவர்சேர்க்கைக் குடிகள்கன
சினமாம் - நாறு
செங்கால்நா ரைகொடுத்து வாடாகன
யினமாம் (14)

உள்ளூர்பெரி யகருப்பக் கோன்சேகரத் தார்க்கு
- மனம்
ஒத்துக்கவு தாரிபத்துக் கொடுத்திட நோக்கு
தொழிலாளிகள் வீட்டுக்குப் பவ்வத்துக் காடை
- சத்தும்
பக்குவம்பண் ணாமல்கொண்டு போடேயினத்
தோடே (15)

---

13. ஓம்புதல் - துதித்தல்
கோன் - அரசன்
வங்கிஷம் - வமிசம்
தீரன் - திண்ணியன்

14. சீலன் - நற்குணசாலி
தெள்ளிமை --அறிவு

15. பவ்வத்துக்-காடை - பத்துப்பத்தாகக் காடை

நலமாநம் வீட்டுக்குத் தான் செவ்வல் காடை - ஒரு
நாநூறு காண்பிறக்கி வைப்பாயொரு கூடை
மூதறிவா கியகுட்டையன் காலாடி திறவான் - ஞான
முத்தன்கா லாடிமுருகன் காலாடியு மறவான் (16)

சாதகமா முக்குளிப் பான்ரெண்டு கொடடா - அவர்
தாரவெகு மதிதன்னை யிருகையா லெடடா
சாராயங் குத்தியுடன் திருவான்பொழிக் காரு - ராம
சாமிபணிக் கனுக்கன்பது தாராவைச் சேரு (17)

நேராக வேபத்து மடையானை உசிப்பாய் - அதை
வித்துரெண்டு மடாக்கள்ளு வாங்கிவந்தால்
பொசிப்பாம்
மிஞ்சியிருக் கின்றபஷ்சி யெல்லாம்துகை பாரு
- அதை
விற்கத்திரு மயஞ்சந்தை கொண்டுபோய்ச்
சேரு (18)

---

16. பிறக்கி - பொறுக்கி
காலாடி - பள்ளர்தலைவன்; முயற்சியுடையோன் எனினுமாம்.
திறவான் - வலியவன்.

17. வெகுமதி - பரிசப்பொருள்
சாராயம் - அரக்கு எனும் மது
குத்தி - சிறுகுடுவை

18. உசிப்புதல் - எழுப்புதல்
மடா - மிடா - பானை
பொசிப்பாம் - புசிப்பாம் - அருந்துவோம்
திருமயம் : காரைக்குடி - புதுக்கோட்டை சாலையில் உள்ள ஊர்.

பஷிகள்சேர்த் துத்தராதரம் பார்த்துரீ வில்லும் -
அதில்
பத்தெட்டொளி யாமலென்னிடம் உள்ளதைச்
சொல்லு
செட்டிமுகாந் திரமாகப் பணங்காசை யெண்ணு -
யெந்தன்
சிங்கிக்குத் தங்கநகை முஷ்திப்புப் பண்ணு (19

## விருத்தம்

32. முன்மேகப் பிணியெனக்கு மருந்தானாய்க்
கார் தவிர்த்தார் முரண்டே செய்யும்
பின்மேகப் பிணிதவிர்த்தென் பிள்ளைகட்கு
புதல்வநல்கிப் பேருண் டாகும்

பொன்மேக நிறைமேனி துரைதிட்டா
ணிக்கருப்பர் புகழ்சேர் நாட்டில்
நன்மேகக் கார்குளுவன் சிங்கிதனைப்
பார்த்தெதொரு சேதிநவில் வானே

---

19. வில்லும் - விற்பாயாக
செட்டி முகாந்தரமாக - செட்டியார் மூலமாக
முஸ்திப்பு - தயார்.

32. மேகப் பிணி - மேகநோய்

நன்மேகம் - நல்ல மழைமேகம்.

## தரு

### கலிப்பா

33. கதிதருந்திட் டாணிக் கருப்பணவேள் நாட்டில்
துதிபெறவே கேட்டகுறி சொல்லிவரப்
போனசிங்கி
யிதமுடைய சிங்காநீ யெவ்விடமென் றேதேடி
அதிரூப மானை அழைத்து வருவாயே

### கலிப்பா

34. காரணர்திட் டாணிக் கருப்பவேள் நன்னாட்டில்
சீர்சிறந்து வாழ்குளுவன் சிங்கிதனைக் காணாமல்
ஊர்பலவுந் தேடி உகந்துகண்டு சிங்கனுந்தான்
கூர்விழியாள் சிங்கிதனைக் கூட்டிவந்து
விட்டானே

---

33. குறிசொல்லுதல் - வருவது உறைத்தல்

34. காரணர் - கடவுள். "ஏழுலகும் பரவும் காரணவன்" (திருவாலவா. 27,32)

உகந்து - மகிழ்ந்து

## தரு

35. வந்திடுஞ் சிங்கியைக் கண்டு குளுவனு
மகிழ்ந்தான் - சில
வார்த்தைகள் கேட்பதற் கேத்தபடி பின்னைப்
புகழ்ந்தான்
யெந்தனை விட்டுப் பிரிந்தொரு மாதமாய்ச்
சிங்கி - நீ
யெங்கே குறிசொல்லி யேது கொடுவந்தாய்
சிங்கி (1)

சித்தசன் சோதரன் திட்டாணி அய்யரைப் போற்றி
ஆர்க்குஞ்சிந்தை நினைந்திட்ட அந்த ரங்களைப்
பார்த்து
உத்தர தெட்சண தேசமெ லாங்குறி சொல்லி - நான்
மெத்த வெகுமதி பெற்றுவந் தேனடா சிங்கா (2)

காலுக்குத் தான்வெள்ளித் தண்டை கொடுத்தார்
சிங்கி - யெங்கள்
கல்வாசல் நாட்டவர் தந்த வெகுமதி சிங்கா
ஆயிக்கும் வெள்ளி கொலுசு கொடுத்தார் சிங்கி -
நெல்லைக்
காரன் மணியமண் ணாப்பிள்ளை தந்தது
சிங்கா (3)

---

35.1 மின்னை - பெண்ணை; மின்னற்கொடி போன்ற இடையாளை.

2. உத்தர - வடக்கு
தெட்சண - தட்சிண - தெற்கு

3. தண்டை - பெண்கள் காலணி
ஆலிக்கும் - ஒலிக்கும்

கஞ்சத்தட் டான்வேலைப் பாடகம் தந்ததார் சிங்கி -
நெல்லைச்
சம்பிரிதி கணக்கப் பிள்ளை தந்தது சிங்கா
மஞ்சள் பாவாடை சலவை கொடுத்ததார்
சிங்கிச் செய்.
வயிரவன் சேர்வை சின்னண்ணன் தந்தது
சிங்கா (4)

கஞ்சத் துப்பட்டா ரவிக்கை கொடுத்ததார் சிங்கி -
முகில்
கண்டிய ரெகுநாதன் சேர்வை தந்தது சிங்கா
செஞ்சிப் பணதி பொன்காப்பு கொடுந்தார் சிங்கி -
யெங்கள்
செப்புள்ளான் சின்னண்ணன் சேர்வை தந்தது
சிங்கா (5)

முன்கை முதாரி மகிழ்ந்து கொடுத்ததார் சிங்கி -
யெங்கள்
முத்தடைக் கப்ப மகிபதி தந்தது சிங்கா
அங்கமாய்த் தங்கு மேசரி த்ந்ததாரடி சிங்கி - மேரு
அழகப்பன் சேருவைக் காரன் கொடுத்தது
சிங்கா (6)

---

4. பாடகம் - பாதகடகம்.

5. கஞ்சம் - தாமரை

பணதி - ஆபரணம்

செப்பு - சொல்; செப்புள்ளான் - சொல்தவறாதவன்

6. முதாரி - ஒருவகைக் கைவளை

மேசரி - ஓர் அணி

மோதிரத்தில் வயிரம் பதித்திட் டாரடி சிங்கி -
யெங்கள்
முத்துக் கருப்பண்ணன் சேருவை தந்தது சிங்கா
மாத்திட வச்சிரக்கல் கொப்பணி தந்ததார் சிங்கி -
யெங்கள்
மூவாச்சி பழனியப் பேந்திரன் தந்தது சிங்கா (7)

காரிட்ட கொண்டையில் முத்துரேக் கிட்டதார்
சிங்கி - (யெங்கள்)
கலங்காப்புலி சேருவைக் காரன்
கொடுத்தது சிங்கா
மார்பில் பதக்கம் மகிழ்ந்து கொடுத்ததார் சிங்கி -
நெல்லை
மாநகரர் தன்னில் வேளாளர் தந்தது சிங்கா (8)

பொற்சுட்டி நெற்றியில் நின்றாட(த்) தந்ததார்
சிங்கி - யெங்கள்
பூசாரி அம்பலம் வேளாக்கள் தந்தது சிங்கா
வச்சிரக் கண்டி சரிநகை தந்ததார் சிங்கி - நெல்லை
மாநக ரூர்ம ரங்கள் கொடுத்தது சிங்கா (9)

---

7. கொப்பு - மாதர் காதணியிலொன்று

8. காரிட்ட கொண்டை - கருங்கூந்தற்கொண்டை

ரேக்கு - கொண்டை அணி

9. சுட்டி - நுதலணி

கண்டி - உருத்திராக்கமாலை

சொக்கத் தங்கத்தால் உள்கட்டு அணிந்ததார் சிங்கி -
யெங்கள்
சுப்பன்செட் டிபழனி செட்டி தந்தது சிங்கா
பைகள்நிறை யபணம் கட்டித் தந்ததார் சிங்கி -
நெல்லையில்
தொழிலா ளிகளெல் லோருந் தந்தது சிங்கா (10)

உந்தனிடைக் கொட்டி யாணம் கொடுத்ததார் சிங்கி -
தாழை
யூருகா லாடிகள் சேரக் கொடுத்தது சிங்கா
சிந்தை மகிழ்ந்துநீ வந்தது நின்றடி சிங்கி - நெல்லை
திட்டாணி அய்யரை வாழ்த்திக்கொண்
டாடிவா சிங்கி (11)

## வாழி விருத்தம்

36. சதுர்மறை முனிவர் வாழி
தமிழ்றி வாணர் வாழி
பதிபெரும் அரசர் வாழி
பரிவுசேர் நாடு வாழி
மதிவளர்ந் தோங்கும் நெல்லை
மாநகர் தினமும் வாழி
கதிதந் துறைதிட் டாணிக்
கருப்பரும் வாழி தானே!

---

10. சொக்கத்தங்கம் - உயர்ந்த மாற்றுள்ள தங்கம்

11. ஒட்டியாணம் - மாதரிடையணி

36. சதுர்மறை - நால் வேதம். ரிக், யசுர், சாம, அதர்வணம் என்பன.

முற்றும்.

# பாடல் முதற்குறிப்பு அகராதி


| | பாடல் எண் |
|---|---|
| அந்தர துந்துமி | 17 |
| அறமுங்கீர்த்தியும் | 5 |
| எதிரியெனவரும் | 8 |
| கண்டேனய்யே | 17 |
| கதிதருந்திட்டாணி | 33 |
| கயிறுகளைத் திருடி | 26 |
| காரணர் திட்டாணி | 34 |
| குவலயத்தில் மிக்க | 15 |
| கெம்பாரய்யே | 23 |
| கைச்சரம் புனை | 30 |
| சதுர்மறை முனிவர் | 36 |
| சிங்கனும் நானே | 16 |
| சுந்தரர்க்குத் தூதுசென்று | 22 |
| செய்யதிரு அகத்தீசர | 31 |
| சோதி நெல்லை | 9 |
| தர்க்கமிடுவார்க்கு | 20 |
| தருணம் வேளையில் | 7 |
| திருமகள் நிதமு | 1 |
| நற்றமிழ்க் கிசைந்த | 4 |
| நிலைச்சிடும் புகழ்சேர் | 2 |
| நீங்காத மலர்ப்பதத்தை | 18 |
| நீதமேவுங்கல்வாசல் | 6 |
| பட்சிகள் சிக்குச் சய்யே | 29 |
| பரியை நரி | 28 |
| பரிவுகூர்ந்தன்பர் | 3 |
| பொருந்தாவிருந்தோ | 24 |
| பைந்தமிழ்சேர் நெல்லை | 27 |
| மந்திரி கிரியை | 10 |
| முன்மேகப் பிணி | 32 |
| மேயினுமய்யே | 21 |

| | |
|---|---|
| யிளங்களிரம்புலி | 13 |
| யெடுத்துவா கண்ணி | 25 |
| யெதிர்த்திடு மருவார் | 11 |
| வந்திடும் சிங்கியை | 35 |
| வருகுதய்யே | 19 |
| விற்பனக் குளுவ நானே | 12 |
| விற்பனச் சிற்றறிவேன் | 14 |

# சொல்லகராதி

அகத்திய முனிவர் 12
அகத்தீசர் 26
அகவல் 10
அடைக்கக்கோன் 65
அடைக்கலங்காத்தார் 16
அண்டம் 34
அண்ணாப்பிள்ளை 69
அந்தணர் 11
அம்பல, உம்பளம் 54
அம்பாரம் 45
அம்புலி 28
அமுதம் 10
அய்யனார் 3, 61
அய்யனார் வீரன் வயல் 50
அரக்கு 32
அரிகரபுத்திரன் 30
அரியநாயகி 14
அரியரன் 3
அழகப்பன் சேர்வை 64
அழகப்பன் சேருவைக்காரன் 70
அழகுக்கருப்பர் 15
அன்றில் 35
~~அன்னம் 34~~
அனுமக்கொடியான் 14

ஆத்திப்பட்டிவயல் 51
ஆதுலர் 6
ஆந்தை 33
ஆலம்பால் 52
ஆலா 45

இடைப்பெண்ணார் 47
இரவலர் 22
இராகு 14
இராவணன் 46
இளணாக்கண்மாய் 34
இளணாக்குளம் 70
இளணாப்பட்டி 63

உத்தரதெட்சணதேசம் 69
உம்பளம் 44
உலகநாயகி 17
உலகாயிக்குளம் 55
உழுவை 40
உள்ளான் 34
உள்ளான் வலை 47

ஊத்துக்கிணறு 44
ஊர்ச்சிட்டு 64
ஊரணி 39
ஊழியக்காரன் 55

எயிறு 48
எரால் 44
எள்ளுவயல் 38

ஏரி 39

ஒட்டியாணம் 72

கச்சை 21
கடுக்கன் 21
கடையம் 21
கண்டன்செய் 45
கண்டியரெகுநாதன் சேர்வை 63

கண்ணி 72, 52
கம்பளி நாரை 70
கயிலாசம் 46
கயிலை 11
கர்நாடகம் 11
கரி 11, 28
கருங்கண்ணி வலை 20
கருங்காலி செய் 60
கருத்தப்பழனியப்பேந்திரன் 64
கருப்பண்ண சுவாமி 2, 25
கருப்பணஞ் சேர்வை 63
கருப்பணசாமி 31
கருப்பர் கிணறு 41
கருப்பவேளான் 45
கருப்பன்செய் 45
கருப்பையர் நாடு 44
கல்லன்செய் 54
கல்வாசல் நாட்டுத்துரை 18
கல்வாசல் நாடன் 16
கல்வாசல் நாடு 43
கலங்காப்புலி சேர்வை 63
கவுதாரிக்கட்டு 46
கவுதாரிக்கூடு 20
கவுதாரி வலை 24
கள்ளு 66
கற்பகத்தரு 28
கற்பகமூர்த்தி 15
கன்னடர் 43

காக்கை 46
காசி 11
காடையின் தட்டு 20
காலாடி 66
காலாடி முருகன் 66

காவேரி 11
காளமுகில் 31
காளி 18

கிஞ்சுகம் 62
கிள்ளை 62
கிளி 47

குஞ்சான் வாய்க்கால் 39
குடகு 11
குத்தீட்டி 21
குபேரன் 38
குருகின்வலை 19
குருகு 36
குலிசம் 20
குழிநரி 22
குளுவன் 33
குளுவன் வலைக்கண்ணி 30
குளுவை நாடகம் 1, 2, 3, 4, 5, 6, 7, 8
குறிசொல்லுதல் 67
குன்றைவேலவர் 63

கூத்தாடி அம்மாள் 16
கூபம் 39
கூழக்கிடா 35
கூழைக்கிடா 44

கெண்டை 40
கெந்தருவப் பட்சி 44

கேகயப் பட்சி 35
கேதாரம் 13
கேது 14

கொக்கு 34, 49, 58, 65
கொக்குமுக்கூடு 20
கொங்கணர் 22
கொங்கு 11
கொச்சி 11
கொடிக்கால் 39, 57, 61
கொடிக்கால் ஓடை 36
கொடிக்கால் வடவனம் 60
கொத்துக்கணக்கன்-செய் 27
கொழும்பு 13

கோகிலம் 47
கோயிலான் கண்மாய் 35

சகோரம் 36
சங்கீதலோலன் 9, 14
சந்திர சூரியர் 11
சல்லடம் 21
சவ்வாது 22
சனி 15

சாதகப்பட்சி 46
சாரதி 44
சாராயம் 67
சாலுவை 21

சிங்களம் 12
சிங்கி 67
சிச்சிலிப்பான் 35
சிட்டு 48
சித்தருவாள் 21
சித்து 20
சிலம்பு 20
சின்னக்கருப்பர் 16

சின்னக்கருப்பேந்திரன் 64
சின்னண்ணன் 63
சின்னண்ணன் சேர்வை 69
சின்னவேளான் உம்பளம் 56

சீதரன் 46
சீதா 14
சீனி 35
சீனம் 12

சுந்தரக் கருப்பர் 15
சுந்தரர் 44
சுந்தரியூரணி 44
சுப்பன் செட்டி 72
சுருமால் 21

சூட்டாங்கறி 64
சூரன் 25
சூரியகிரணம் 21
சூரியவம்சம் 30
சூரியன் 50

செங்கால் நாரை 35
செட்டி 52
செட்டிக்கண்மாய் 52
செம்பியான் வாய்க்கால் 50
செம்போத்து 52
செம்மறிக்கடா 32
செயவீர பத்திரர் 16
செல்வக் கருப்பர் 50
செவ்வல் காடை 65
செவ்வாய் 15

சொக்கத்தங்கம் 72

சொர்ணம் 60

சோமன் 63
சோழன் 65

டில்லி 12

தங்கமேசரி 71
தட்டான் 70
தண்டை 29
தண்ணீர்ப் பந்தல் 39
தந்திமாமுகன் 1
தரு 37, 44

தாரா 34
தாராவலை 46
தாழக்கண்மாய் 36
தாழையூர் 72

திட்டாணி அய்யர் 30
திட்டாணி அய்யனார் 11, 15
திட்டாணி ஊரணி 43
திட்டாணிக் கருப்பண்ணசுவாமி
திட்டாணிக் கருப்பண்ணர் 33
திட்டாணிக் கருப்பணவேள் 67
திட்டாணிக் கருப்பர் 34, 37
திட்டாணிக் குளம் 51
திம்மப்பராசர் 16
திரிசங்கு சொர்க்கம் 30
திருமகள் 1
திருமயம் 66
திருமயம் சந்தை 66
திருவிளையாடல் 14

துரோபதை 42
துவாரகை 42

தூக்கணிப் பட்சி 44

தெலுங்கம் 13

தேர் 30
தேவன் வாய்க்கால் 26
தேளி 41

தொண்டமானார் 18
தோடையம் 5
தோப்பு 39

நத்தை 47
நரசிங்கன் கண்மாய் 35
நளராசன் 24

நாகணப்புள் 45
நாகணவாய்ப்புள் 60
நாச்சியார் வாய்க்கால் 3
நாட்டார் 49
நாரை 39
நாவலடிச் செய் 38

நீர்க்காக்கை 35
நீலப்புறா 40

நெல்லை 30
நெல்லை-நகர் 19
நெல்லை-நன்னகர் 19
நெல்லை நாடு 19
நெல்லை மாநகர் 72, 69

நெல்லையம்பதி 2, 5, 6, 15, 24
நெல்லையூர் 1, 3, 34

பச்சிலைக் கெண்டை 44
பச்சைப் பயறு 30
படுக்கைக் கண்ணி 26
பண்டார சுவாமி 21
பண்டார நாதர் 16
பதக்கம் 21
பதினெட்டாம்படி 12
பரளிச்செய் 44
பரி 37
பருந்து 33
பவளம் 12
பழனிசெட்டி 72
பழனம் 60
பழனியப்பேந்திரன் செய் 45
பன்றி 60

பாஞ்சாலம் 12
பாடிக்குருவி 38
பார்க்கடல் 10
பார்த்தன் 42
பார்வதியாள் 35
பாலெருமை 30

பிரம்மா 11
பில்லிசூனியம் 37

புஷ்கலை 47
புதுக்கண்மாய் 40
புரவலர் 12
புரவி 12
புராணம் 42

புல்லுருவி 21
புலி 30

பூசாரி அம்பலம் 65
பூதப்பெண் 47
பூரணி 46
பூவையர் 15

பெரியகண்மாய் 34
பெரிய கருப்பர் 16
பெரிய மடைப் பாய்ச்சல் 38
பெருங்கண்ணிவலை 20
பெருமால் வாய்க்கால்

பேச்சி 16
பேரண்டச்சுருக்கு 46
பேரம் 30

பொதிகை 14, 31
பொதிகை மலை 31
பொற்சுட்டி

மங்களம் 9
மஞ்சள் கழுகு 60
மஞ்சள் பாவாடை 69
மஞ்சனிக் கண்மாய் 52
மஞ்சனிக் காடர் 7
மஞ்சனிப் பதி 16
மடையான் 66
மண்டபம் 39
மண்வெட்டித் தாரா34
மணிப்புறா 61
மணியம் 62
மணியம் அண்ணாப்பிள்ளை 62

மதனன் 45
மது 22
மந்திர கிரி 10
மந்திரகிரியை 10
மயில் 47
மயிலேறும் பெருமாள் 66, 63
மராட்டம் 43
மராடர் 43
மருது 55
மருதையடிக்கிணறு 55
மலர்மகள் 22
மலையாளம் 11

மாடப்புறா 34
மாடம் 57
மாயன் 47
மாரன்
மாரிக் குருவி 50
மான் 30

முக்குளிப்பான் 38
முக்குளிப்பான் வலை 46
முத்தடைக்கப்ப மகிபதி 69
முதாரி 69
முப்புரம் 47
மும்முலைத் தடாதகை 5
முருகு 21

மூலிகை 21
மூவாச்சி செய் 45

மேகப் பிணி 67

மோடி 33

மோதிரம் 72

யாழ்ப்பாணம் 13

ரவிக்கை 69

ராங்கியத் தேவர் 63
ராங்கியம் 19
ராமசாமி பணிக்கன் 66
ராமவேளான் தோப்பு 55

ரெகுநாதவேள் 63

லேஞ்சு 63

வக்கா 34
வங்கம் 13
வங்காளம் 12
வச்சிரக்கல் 69
வச்சிரம் 30
வட்டப் பிராந்து 57
வடுகநாதக் குருக்கள் 63
வண்டாங்குடிக் கண்மாய் 34
வண்டாங்குடி வயல் 38
வயிரவமூர்த்தி 16
வயிரவன் 63
வயிரவன் சேர்வை 63
வரதன் 9
வரால்மீன் 40
வரிசைத் தமிழ் 8
வலம்புரிப்பிள்ளையார் 18
வலைக்கண்ணி 46
வள்ளிநாயகன் 2
வளரி 21

வாசுகி 10
வாம்பரி 15
வாரணம் 15
வாவி 21
வாழிவிருத்தம் 72

விருத்தம் 33
விரையடியம்மன் 17

வீரப்பன் 64
வீரபத்திர தேவர் 8
வீரபத்திரன் 8
வீரவேளான்செய் 52
வீரன்வாய்க்கால் 41

வெள்ளைக்கிளி 63
வெள்ளைக் கொக்கு 46
வெள்ளைச்சிறகி 44
வெள்ளைப் புறா 38
வெள்ளைப் புறாவலை 46
வெள்ளைமடையான் 34

வேசை 47
வேட்டை 33
வேதியன் 56
வேப்பஞ்செய் 53
வேளாளர் 71
வேளாளர் வயல் 52
வேளாளன் செய் 52

முற்றும்